# Salve Regina

மே 2009

SOCIETY OF ST. PIUS X

மலர்: 4 இதழ்: 5

(தனிச்சுற்றுக்கு மட்டும்)





**ஏனென்றால் கர்த்தருடைய இஸ்பிரீத்தானவர் பூலோகத்தை நிரப்பினார்; அவரிடத்திற் சகலமுமடங்கியதால் அவர் சொல்லப்படும் யாவையும் அறிவார்.**

**(ஞானாகமம். 1:7)**

# Salve Regina

> “கத்தோலிக்கப் பத்திரிகைகளை வெளியிட்டு நேரிய கருத்துள்ளவர்களுக்கு வழங்கினால் மட்டும் போதாது; அனைவராலும் அவை வாசிக்கப்படும்படியாக முடிந்தவரையில் அவற்றைப் பரப்புவதும், குறிப்பாக அவர்களிடமுள்ள நச்சுக் கலந்த தீய புத்தகங்களை, கிறீஸ்தவப் பிறர்சிநேகம் தவறாமல் அகற்றியெறிவதும் அவசியமாகும்.”
>
> *– பாப்பரசர் அர்ச். 10–ம் பத்திநாதர்.*



**ஆசிரியர் & வெளியீடுவோர்**
சங். வளன் D. ராஜகுமார்

**உதவி ஆசிரியர்**
திரு. P. பிரான்சீஸ் குமார்

**கட்டுரையாளர்கள்**
சங். ஜோஸப் ஃபைஃபர்
Dr. S. வின்ஸெண்ட்
Dr. E. போஸ்கோ
திரு. L.M. அந்தோணி
திரு. P.J. டேவிட்.
Dr. R. அருள் ஞானராஜ்

**வடிவமைப்பு**
T.V. ரொசாரியோ

**விநியோகம்**
திரு. P. போத்திராஜ்
திரு. R.P. இருதயராஜ்
திரு. M. இன்னோசென்ட்
திரு. A. கிளமெண்ட்
திரு. T. வின்ஸெண்ட் ராய்ஸ்
திரு. C. சந்தானராஜ்
திரு. R. பயஸ் ஜெபசிங்
திரு. R. மிக்கேலஸ்
திரு. G. அருள் மரிய விக்டர்

**நன்கொடைகள், கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**
Rev. Fr. Valan Rajakumar
'Salve Regina'
Marcel Lefebvre Place
8A/3, Annie Nagar, Seevalaperi
Road Palayamkottai - 627002
✆: 0462 - 2586201 ; 2572389

**அச்சீடுவோர்**
மாதாவின் சூசை அச்சகம்
தூத்துக்குடி – 2

*சேசுக்கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,*

*மே மாதம் என்றாலே தேவமாதாவின் நினைவுதான் வரும். ஏனெனில் மே மாதம் மாதாவின் மாதம். திருச்சபையும் இந்த மே மாதத்தை நமதன்னைக்கு ஒப்புக்கொடுத்து இம்மாதத்தில் அவர்களை அதிகமதிகமாக மகிமைப்படுத்தி, சங்கைசெய்ய வேண்டுமென்று நம்மைத் தூண்டுகிறது. மே மாத இறுதிநாளில் இராக்கினியான மாதாவின் திருநாளை ஏற்படுத்த அவர்களை பரலோக பூலோக அரசியாக மகிமைப்படுத்தி மகிழ்கின்றது திருச்சபை!*

*தேவமாதாவுக்கு தோத்திரமாக ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் இந்த மே மாதத்தில் மாதாவைபற்றியும், அவர்களுக்கு நாம் காண்பிக்கவேண்டிய சங்கை, மரியாதை, சிநேகம், ஸ்துதி இவைகளைப்பற்றி இரட்சகர் சபையை ஏற்படுத்திய அர்ச். அல்போன்ஸ் மரிய லிகோரியார் தருகிற அறிவுரைகளை நினைவூட்டுவது நல்ல பயனைத் தரும் என்று எண்ணுகிறேன். “நமது பரலோக இராக்கினி எவ்வளவு தயாளமும் தாராள குணமும் உடையவர்களாயும் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் தன்னுடைய ஊழியர்கள் காட்டுகின்ற மிகச்சிறிய பக்திமுயற்சிகளுக்கும் முதலாய் மிகுந்த சன்மானங்களைத் தருகிறார்கள்” என்ற கிரேட் நகர அர்ச். பிலவேந்திரரின் வாக்கியத்தை மேற்கோள் காட்டியவர் தேவதாயின் சலுகையைப் பெற இரண்டு நிபந்தனைகளைக் கூறுகிறார்: முதலாவது, நாம் நமது பக்தி முயற்சிகளை ஒப்புக்கொடுக்கும்போது நமது ஆத்துமம்* **பாவமின்றி இருக்கவேண்டும்**. *இரண்டாவது, நமது பக்தி முயற்சியில் நாம்* **நிலைத்திருக்க வேண்டும்** *என்று அர்ச். அல்போன்ஸ் லிகோரியார் கற்பிக்கிறார்.*

*தேவ இஷ்டப்பிரசாதமும், இறுதிவரை நிலைத்திருக்கும் நிலைமை வரமும் எவ்வளவு முக்கியமான காரியம் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். “என் சரீரத்தை சுட்டெரிக்க கொடுத்தாலும் என்னிடத்தில் தேவசிநேகம் (தேவ இஷ்டப்பிரசாதம்) இல்லாவிட்டால் எனக்கு பிரயோசனம் ஒன்றுமில்லை...” (1 கொரி. 13:3) என்று அர்ச். சின்னப்பர் கூறுகிறார். பாவத்தில் நிலைத்திருந்து அதாவது தேவ இஷ்டப்பிரசாதத்தை இழந்த நிலையில் தேவமாதாவைப் புகழ்பவர்கள் அவர்களுக்கு மகிமையை அளிப்பதற்கு பதிலாக அவர்களின் இருதயத்தை நோகச்செய்கிறார்கள்.*

*“மரியாயின் ஊழியன் ஒருபோதும் இழக்கப்படமாட்டான்” என்பது முதுமொழி! ஆனால் இதற்கான நிபந்தனை: மரியாயின் ஊழியன் பாவமில்லாமல் வாழ்வது அல்லது குறைந்தபட்சம் பாவத்தை விட்டுவிடுவதற்கு மனதாய் இருப்பது. எனவே மாதாவின் உதவி, சலுகைகளைப் பெற நம்மை பாவம் மேற்கொள்ளாதவாறு பார்த்துக்கொள்வோமாக!*

*மே மாதத்தில் நமது ஆலயங்களிலும், இல்லங்களிலும் தேவமாதாவிற்கு பீடங்கள் அமைத்து அவைகளை அன்றலர்ந்த வண்ண மலர்களால் அலங்கரித்து, திருவழிபாடுகளில் அவர்களைக் கொண்டாடி, மாதா புகழ்மாலை - பாடல்கள் இசைத்து போற்றி மகிமைப்படுத்தி மகிழ்கின்றோம். அதே சமயத்தில் நமது ஆன்மாக்களை தேவ வரப்பிரசாதங்களாலும் மாதாவின் புண்ணியங்களாலும் அலங்கரிக்க வேண்டும். அதற்கு முயலவேண்டும்.*

*அன்பார்ந்தவர்களே அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் அதிசிரேஷ்டர் மிக.வந். பெர்னார்டு ஃபெல்லே ஆண்டகையவர்கள் மீண்டும் ஒருமுறை ஜெபமாலை போரை* (Rosary Crusade) *தொடங்க நமக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். ஏற்கனவே இரண்டு தடவை ஜெபிக்கப்பட்ட ஜெபமாலைகளை* **“ஞானப் பூச்செண்டாக”** *பாப்பானவரிடம் சமர்ப்பித்திருக்கிறார். இச்செபமாலைகளின் மூலம் விடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் மோட்சத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டன! திருச்சபையும், பாப்பரசரும் அதிகம்*

துன்புறுத்தப்படும் இந்நாட்களில் பாத்திமாவில் நமதன்னை விடுத்த எச்சரிக்கையையும், அதற்கு மருந்தாக கேட்ட ரஷ்ய ஐக்கிய அர்ப்பணத்தையும் நினைவுகூர்ந்த அதிசிரேஷ்டர் அது கொண்டுவரும் மரியாயின் மாசற்ற இருதயத்தின் வெற்றியை துரிதப்படுத்த புதியதோர் ஜெபமாலை யுத்தத்தை துவக்க அறைகூவல் விடுத்துள்ளார். இப்போது முதல் 2010 தேவமாதாவின் மங்கள வார்த்தை திருநாள் வரையிலும் இந்த கருத்துக்காக 12 மில்லியன் ஜெபமாலை களை பக்தியோடு ஜெபித்து ஒப்புக்கொடுக்க நம்மைக் கேட்டுள்ளார். கடந்த முறையைப் போன்றே இந்த முறையும், மரியாயின் மாசற்ற இருதயத்தின் வெற்றியை - அதாவது உலக திருச்சபையின் சமாதானத்தைக் கொண்டுவரும் ரஷ்ய ஐக்கிய அர்ப்பணம் பாப்பரசரால் செய்யப்படவேண்டும் என்ற இலக்கை முன்னிருத்தி ஜெபமாலை யுத்தத்தைத் துவக்குவோமாக!

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி**

**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை,**

**பாளையங்கோட்டை.**

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

## விசுவாச மந்திரத்தின் முதல் பிரிவு

**எத்தனை விசுவாசப் பிரமாணங்கள் உண்டு?** விசுவசிக்கவேண்டிய சத்தியங்களைக் கொண்டிருக்கும் பிரதான விசுவாசப் பிரமாணங்கள் நான்கு.

**முதலாவது:** அப்போஸ்தலர்கள் உண்டாக்கின விசுவாச மந்திரம்.

**இரண்டாவது:** அதில் சுருக்கமாய் அடங்கியிருக்கும் சத்தியங்கள், நீசே, கொன்ஸ்டாண்டினோபிலி என்கிற நகர்களில் கூடின சங்கங்களால் விவரிக்கப்பட்டன. இந்த விசுவாச மந்திரந்தான் திவ்விய பூசையில் சொல்லுகிறோம்.

**மூன்றாவது:** குருக்கள் பிரார்த்தனைமாலையில் வேண்டிக்கொள்ளும் அர்ச். அத்தனாசியாருடைய விசுவாச மந்திரம்.

**நான்காவது:** திரிதெந்த் என்கிற பொதுச்சங்கம் உண்டாக்கின விசுவாச பிரமாணமும் உண்டு. வத்திக்கான் என்கிற சங்கம் அர்ச. பாப்பானவருடைய மேலான அதிகாரத்தின்பேரிலும், வேத சத்தியங்களைத் தீர்மானிப்பதில் தவறாத வரத்தின்பேரிலும், சில வாக்கியங்களை அதே பிரமாணத்திலே சேர்ந்திருக்கின்றது.

### I. விசுவாசத்தின்பேரில் வியாக்கியானம்

**விசுவசிக்கிறேன்:-** நாம் ஒரு காரியத்தைக் கண்ணால் காணாமலும், காதால் கேளாமலும், புத்தியால் முதலாய்க் கண்டுபிடியாமலிருந்த போதிலும், நம்பிக்கைக்குரிய வேறொருவன் சொன்னதினிமித்தம் அந்தக் காரியம் உண்மையென்று அங்கீகரித்துக்கொள்வதுதான் விசுவாசம். ஓர் மனிதன் சொன்னதினிமித்தம் யாதொன்றை அங்கீகரித்துக்கொள்வது மனித விசுவாசமென்றும், சர்வேசுரன் திருவுளம்பற்றியதினிமித்தம் ஒத்துக்கொள்வது தேவ விசுவாசமென்றும் சொல்லப்படும்.

**1. தேவ விசுவாசமென்றாலென்ன?** திருச்சபை இதைப்பற்றி வத்திக்கான் பொதுச்சங்கத்தில் தீர்மானித்தபடி போதிக்கிறதாவது: "ஏவுதலும் ஒத்தாசையும் கொடுக்கிற தேவ வரப்பிரசாதத்தைக் கொண்டு, சர்வேசுரன் அறிவித்த சகல சத்தியங்களும் மெய்யென்று ஒத்துக்கொள்ளுகிறதே சுபாவத்துக்கு மேற்பட்ட தேவ விசுவாசமென்கிற புண்ணியமாம். இப்புண்ணியத்தினாலே அந்தச் சத்தியங்கள் தங்களில்தானே எவ்விதமாக உண்மையாயிருக்கின்றனவென்று புத்தியின் சுபாவமான வெளிச்சத்தினால் கண்டுபிடிக்கிறதினிமித்தம் விசுவசிக்காமல், தவறிப்போகக் கூடாதவரும் மற்றவர்களை ஏமாற்றக்கூடாதவருமான சத்திய சுரூபியாகிய சர்வேசுரன்தாமே இவைகளை வெளிப்படுத்தியிருப்பதினால் மாத்திரம் இச்சத்தியங்களை விசுவசிக்கிறோம். இவ்விசுவாசமானது மனிதனுடைய இரட்சணியத்துக்கு அஸ்திவாரமாயிருக்கிறது."

இங்கே சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களை இப்போது அதிகத் தெளிவாய் விவரித்துக் காட்டப்போகிறோம்.

**2. விசுவாசம் இரட்சணியத்துக்கு அவசியமா?** முற்றிலும் அவசியம். விசுவாசம் சகல மேலான புண்ணியங்களுக்கும் அஸ்திவாரம். சர்வேசுரன் இருக்கிறாரென்றும், சுபாவத்துக்கு மேற்பட்ட அந்தஸ்துக்கு நம்மை உயர்த்தி, தம்மை முகமுகமாய்த் தரிசிக்கும்படி சகல மனிதரையும் உண்டாக்கினாரென்றும் விசுவசிக்காவிட்டால், சத்திய வேதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. விசுவாசமின்றி நாம் மோட்சத்தை அடைவதற்குச் சர்வேசுரன் தாராளமாய் வரப்பிரசாதங்களைப் பொழிகிறாரென்று முழுநம்பிக்கையாயிருக்கிறதெப்படி? அந்த மேலான கதிக்கு வேண்டிய வழிபாடுகளை அறிகிறதெப்படி? சர்வேசுரனை இப்பூலோகத்தில் எல்லாவற்றையும் பார்க்க அதிகமாய்ச் சிநேகித்து, மறுலோகத்தில் சம்பூரணமாய்ச் சுகித்து அநுபவிப்போமென்று அறிகிறதெப்படி? ஆகையால் விசுவாசம் இரட்சணியத்துக்கு ஆதியும் அஸ்திவாரமுமாயிருக்கிறது. இந்த விசுவாசத்தில் மரண பரியந்தம் உறுதியாயிருப்பவர்கள் மாத்திரம் இரட்சணிம் அடைவார்களென்பது வேச சத்தியம்.

ஆகையினால் வேதாகமங்களில் சொல்லியிருக்கிறபடி, விசுவாசமின்றி, இரட்சணியமில்லை. விசுவசியாதவன் நித்திய ஆக்கினைக்குத் தீர்வையிடப்படுவான்.

(தொடரும்)



# அர்ச். 10–ம் பத்திநாதர் குருக்கள் சபையின் நண்பர்கள் மற்றும் உபகாரிகளுக்கு கடிதம் எண்: 74.

## வசந்த காலம், 2009.

அன்பார்ந்த நண்பர்களே, விசுவாசிகளே,

கடந்த அக்டோபர் மாதம் லூர்துபதிக்கான திருயாத்திரையில் ஒரு புதிய ஜெபமாலைப் போரைத் (Rosary Crusade) தொடங்கி வைத்தபொழுது இவ்வளவு சீக்கிரத்தில் பதில் வரும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. நமது முதல் விண்ணப்பத்தை ஏற்று, பாப்பானவரின் வழியாகவும் பாரம்பரிய பூசையின் மீதான அவரின் தன்னிச்சையான ஆணை மடல் (Motu Proprio) வழியாகவும், நமது நல்ல மோட்ச அன்னை நமக்கு பதில் அளித்தது போலவே, நம்முடைய 2வது வரப்பிரசாதத்தையும் மிக விரைவில் தந்தருள பரிசுத்த கன்னிகை தயைபுரிந்தார்கள். ஜனவரி மாதத்தில் நான் உரோமைக்கு விஜயம் செய்தபோது பாப்பரசரின் சுகிர்த கருத்துகளுக்காக செய்யப்பட்ட 17,03,000 ஜெபமாலைகளைக் கொண்ட "ஞானப்பூச் செண்டினை" சமர்ப்பித்த அதே வேளையில், மிக. வந். கர்தினால் காஸ்திரிய்யோன் ஹோயோஸ் ஆண்டகையிடமிருந்து திருச்சபை விலக்கமென்று சொல்லப்பட்டுவந்த ஆணையை திரும்பப்பெறும் மாற்று ஆணையை நான் பெற்றுக்கொண்டேன்.

பாரம்பரிய இயக்கத்தின் மீதான தன்னுடைய நல்லெண்ணத்தின் அடையாளமாக வத்திக்கானிடமிருந்து இதை கடந்த 2001-ம் ஆண்டே நாம் கேட்டிருந்தோம். ஏனென்றால் 2-ம் வத்திக்கான் சங்க காலத்திலிருந்தே பரி. திருச்சபையில் பாரம்பரியமாக இருந்தவை யாவையும், பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்க மனதாய் இருந்த எல்லோரும் தொடர்ந்து எதிர்க்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வெளியேற்றப்பட்டும் வந்தனர். இவ்வகையான நடத்தை, சந்தேகமின்றி உரோமையின் மீதான நமது நம்பிக்கையின் ஒரு பாதியை, ஏன் முழுவதையும் அழித்துப்போட்டது. இழக்கப்பட்ட இந்த நம்பிக்கை ஓரளவேனும் திரும்பாத வரைக்கும், நமது உறவு மிகக் கொஞ்சமாகத்தான் இருக்கும் என்று நான் ஏற்கனவே சொல்லியிருந்தேன். நம்பிக்கை என்பது இங்கு நல்ல எண்ணம் அல்லது உணர்வு மட்டுமல்ல; திருச்சபை அதிகாரிகளிடம் "பாரம்பரிய மனமுடையவர்கள்" என்று நாம் அழைக்கும் நன்மைத்தனத்தை நாம் கண்டுகொள்ளும்போது இயல்பாகவே தோன்றும் விளைவும் நம்பிக்கை என்று பொருள்படும். இதை மனதில்கொண்டே நம்முடைய முன்நிபந்தனைகள் உருவாக்கப்பட்டன. நம்முடைய நிலைபாடும், பரிசுத்த ஸ்தானத்தைக் குறித்தான நம்முடைய நடத்தையும், இன்று திருச்சபையில் நிலவிவரும் குழப்பநிலையை அறிந்திருந்தாலேயன்றி, புரிந்துகொள்ள முடியாது. இது மேலார்ந்தவாரியான காரியமோ அல்லது தனிப்பட்ட கண்ணோட்டமோ அல்ல. இது நம்முடைய கண்ணோட்டத்தைச் சார்ந்தில்லாமல், மெய்யாகவே நிலவிவரும் ஒன்றாகும். திருச்சபை அதிகாரிகளும் இதை அவ்வப்போது ஆமோதித்து வந்துள்ளனர். அவ்வப்போது நடந்தேறும் சம்பவங்களும் இதை மெய்ப்பித்து வருகின்றன. மாறக்கூடிய வகையிலும், சிக்கலான வகையிலும் இருக்கும் இக்குழப்பநிலை, சில சமயங்களில் ஆழமானதாகவும், வேறு சமயங்களில் சூழ்நிலை காரணமாகவும் இருக்கின்றன. எப்படியென்றாலும், நாம் எல்லோரும் இதனால் துன்புறுகிறோம்.

புது வழிபாட்டு முறையில், அடிக்கடி பெரிய துர்மாதிரிகையாக இருக்கும் சடங்குகளினாலும், திருச்சபையின் பல நூற்றாண்டுகள் பழமையான போதனைகளுக்கும், அர்ச்சியசிஷ்டவர்களின் மாதிரிகைகளுக்கும் நேர் எதிராக இருக்கும் நல்லொழுக்கத்திற்கு மாறான போதனைகளாலும் - இவைகளால் விசுவாசிகள் வேதனைப்படுகிறார்கள். கத்தோலிக்க கல்வி ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்கப்பட்ட தங்கள் குழந்தைகள் விசுவாசத்தை இழப்பதை கண்டும், மெய்யான ஞான போதனை இல்லாமையால் கத்தோலிக்க விசுவாச சத்தியங்களை குறித்து அவர்களிடம் நிலவும் அறியாமையைக் கண்டும் பெற்றோர்கள் பெரிய துயரத்துக்கு உள்ளாகிறார்கள். தங்களது சபையின் ஒழுங்குகள் மாற்றப்பட்டதாலும், சங்கத்திற்குப்பிறகான மாற்றுப் போதனைகளாலும் எண்ணற்றத் துறவிகள் சுவிசேஷ உணர்வை இழந்தவர்களாய் குறிப்பாக, ஒறுத்தல், தரித்திரம், பரித்தியாகம் ஆகியவற்றை கைவிட்டுவிட்டார்கள். இதன் விளைவாக தேவ அழைத்தல்களில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டு பல்வேறு துறவற சபைகளும் துறவற ஸ்தாபனங்களும் ஒன்றுக்குப்பின் ஒன்றாக தங்களது மடங்களை மூடிவருகின்றன. பல மேற்றிராசனங்களில் நிலைமை இன்னும் மோசமாகி வருகின்றன.

இவை அனைத்தும் தற்செயலாக ஆனவையல்ல. ஆனால், இவைகள் திருச்சபையை சீர்திருத்தி காலத்திற்கு ஏற்ப மாற்றும் நோக்கத்தில் வந்த சங்கத்தின் விளைவுகளேயாகும். நாமோ, திருச்சபையில் குழப்பம் எதுவுமே இல்லாதபோது அங்கு குழப்பம் இருப்பதாகக் கூறுகிறோம் என்றும், அல்லது இக்குழப்ப நிலைக்கு வத்திக்கான் சங்கம்தான் காரணம் என்று தவறாகச் சொல்கிறோம் என்றும், அல்லது இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி எதிர்ப்பு மனபான்மையோ அல்லது சுதந்திர மனப்பான்மையோ கொண்டுள்ளோம் என்று குற்றம் சாட்டப்படுகிறோம்.

ஆனால், திருச்சபையின் தந்தையர்கள் எழுதியவைகளை எடுத்துக்கொண்டாலும் அல்லது திருச்சபையின் ஆசிரியத்தை எடுத்துக்கொண்டாலும், அல்லது வழிபாட்டையோ அல்லது காலங்காலமாய் கடந்து நிற்கும் வேத சாஸ்திரத்தை எடுத்துக்கொண்டாலும் அவற்றை முழுமனதோடு ஏற்றுக்கொள்வதால் நம்மிடையே ஒற்றுமையைக் காண்கிறோம். இந்த வேதசாஸ்திர ஒற்றுமையானது இன்று நடைமுறையில் பகிரங்கமாக எதிர்க்கப்படுகிறது, தாக்கப்படுகிறது, அலட்சியப்படுத்தப்படுகிறது. நாம் ஒரு பிளவும் உண்டாக்கவில்லை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது இருக்கிறது.

நவீனர்கள் பாரம்பரிய சிந்தனைகளை, செயல்பாடுகளை எவ்வளவு தூரத்துக்கு வெறுத்து தள்ளுகிறார்கள் என்றால், "திருச்சபை விலக்கம்" என்பதை திரும்பப் பெற்ற பிறகும் கூட சில மேற்றிராணியார்கள் நம் விஷயத்தில் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதிலிருந்து அறிந்து கொள்ள லாம். இதை நாம் பாரம்பரியத்திலிருந்து பிளவு என்று அழைக்காமல் வேறு என்னவென்போம்!

மெய்யாகவே, ஜனவரி 21-ம் தேதி வெளிவந்த ஆணையைக் குறித்து நாம் அதிசயித்தது போலவே, முற்போக்குவாதிகள் மற்றும் இடதுசாரிகள் இது குறித்துக் காட்டிய கடுமையான எதிர்ப்பைக் கண்டு நாம் ஆச்சரியப் படுகிறோம். இவர்கள் மிக.வந். வில்லியம்சன் ஆண்டகை யவர்கள் கூறிய ஒருசில வார்த்தைகளைப் பயன்படுத்தி, நமது அர்ச். 10-ம் பத்திநாதர் சபைக்கு எதிராக அநீதியான குற்றச்சாட்டுகளைக் குவித்து, பலி ஆட்டுக்குட்டியாக மாற்றினார்கள். உண்மையிலேயே, மற்றுமொரு முக்கிய மான போருக்கு நாம் கருவியாக்கப்பட்டுள்ளோம். அர்ச். சின்னப்பர் கூறுவதுபோல ஆகாயத்தில் உலாவும் தீய ஆவிகளுக்கெதிரான போராடும் திருச்சபையின் போராட் டத்தை நடத்துகிறது. ஆதியாகமத்தில் அறிவிக்கப்பட்டதும், அர்ச். அருளப்பரின் காட்சியாகமத்தில் உள்ளதுமான ஆத்தும இரட்சண்யத்திற்காக நடைபெறும் இப்பெரும் போராட்டத்தை திருச்சபையின் பெரிய நீண்ட வரலாற்றில் நம்முடைய இச் சிறிய வரலாற்றையும் நாம் எழுதிவைக்கத் தயங்கவில்லை. ஞானரீதியில் இருக்கும் இப்போராட்டம், சில சமயங்களில் காணக்கூடிய வகையில் உலகரீதியிலும், வெளிப்படையான கலாபனைகள் வழியாகவும் வருகின்றன.

கடந்த சில மாதங்களில் நடந்தேறியவைகளில், இந்தப் போராட்டம் வலுவடைந்திருக்கிறது என்பதை நாம் கண்டு உணரவேண்டும். இதில் நமக்குத் தெளிவாக புலப்படுவது எதுவென்றால், கிறீஸ்துவின் ஸ்தானாதிபதியான பாப்பான வர் திருச்சபையில் செய்யத் தொடங்கியிருக்கும் புதுப் பித்தல் முயற்சி குறிவைத்து தாக்கப்படுகிறது. திருச்சபையின் தலைமை நம்முடன் நெருங்கி வருவதைப் பார்க்க சிலர் பயப்படுகிறார்கள். அவர்கள் 2-ம் வத். சங்கத்தால் செய்யப் பட்டவைகள் இழக்கப்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறார் கள். எனவே அதைத் தடுக்க தங்களால் ஆன அனைத்தையும் செய்கிறார்கள். பாப்பானவர் மெய்யாகவே எந்த சிந்தனை கொண்டிருக்கிறார்? அவருடைய நிலைப்பாடு என்ன? யூதர்களும், நவீனர்களும் அவரை 2-ம் வத். சங்கம் அல்லது அர்ச். 10-ம் பத்திநாதர் சபை இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்படி கோருகிறார்கள். இவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வண்ணம் வத்திக்கான் நாட்டு செயலகம் நாம் (அர்ச். 10-ம் பத்திநாதர் சபை) திருச்சட்ட ரீதியாக (Canonical Existence) இயங்குவதற்கு நிபந்தனை - நாம் திருச்சபையின் இன்றைய நிலைக்கு - பிரச்சினைகளுக்கு முக்கிய மூலமாக (source) கருதி வருவதும், எப்போதும் நாம் எதிர்த்துவந்ததுமான, 2-ம் வத். சங்கத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதேயாகும்! எனினும் அவர் களும் நம்மைப்போலவே, நவீன எதிர்ப்பு உறுதிமொழிக் கும், திருச்சபையின் அனைத்து கண்டனங்களுக்கும் உட்பட் டிருக்கிறார்கள்.

எனவே 2-ம் வத். சங்கம் பற்றியவைகளை திருச்சபை யின் முன்னிலையிலும் சர்வேசுரனின் முன்பாகவும் எடுத்த பகிரங்க வார்த்தைப்பாட்டின் (விசுவாச அறிக்கை, நவீன எதிர்ப்பு உறுதிமொழி) ஒளியிலன்றி வேறு வகையில் பேசித் தீர்க்க நாம் விரும்பவில்லை. 2-ம் வத். சங்க அறிக்கைகளும், பகிரங்க வார்த்தைப்பாடும் விசுவாச அறிக்கை, நவீன எதிர்ப்பு உறுதிமொழி ஆகியவை ஒன்றுக்கொன்று புறம்பாய் இருந்தால் நூதனமானவை தவறு என்பது திண்ணம். இக்காரியங்களைக் குறித்து அதிக ஒளி கிடைக்க வத்திக்கா னால் அறிவிக்கப்பட்டுள்ள "வேதசத்திய உரையாடல் களின்" மீது நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

'திருச்சபை விலக்கம்' என்ற தண்டனையைத் திரும்ப பெற்ற ஆணையினால், ஏற்பட்டிருக்கும் புதிய சூழ்நிலை யில், இது அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபையின் சட்டரீதியான நிலைப்பாட்டில் எந்த மாறுதலும் கொண்டு வரப்படவில்லை என்றாலும்கூட இதனை (Canonical Existence) மறுத்துவந்த பல மேற்றிராணிமார்கள் அர்ச். 10-ம் பத்திநாதர் சபை திருச்சட்டத்திற்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்று கூறுகிறார்கள். (அதாவது அர்ச். 10-ம் பத்திநாதர் சபை திருச்சட்டத்தின்படி ஒரு 'அமைப்பு' என்பதையே அங்கீகரிக்கவில்லை என்று சொல்லிவந்த அவர்கள், இப்போது 'அமைப்பு' என்பதை அங்கீகரித்து, திருச்சட்டத்திற்கு கீழ்ப்படிந்திருக்கவேண்டும். என்று கூற ஆரம்பித்துள்ளனர்! - ஆசிரியர்.) ஏற்கனவே ஒரு ஜெர்மனி நாட்டு மேற்றிராணியார், இவ்வாண்டு இறுதிக்குள் அர்ச். 10-ம் பத்திநாதர் சபை மீண்டும் திருச்சபைக்கு புறம்பே ஆகிவிடும் என்று சொல்லியிருக்கிறார்! நாம் கேட்டிருந் ததும், நடைமுறைக்கு ஒத்துவருவதுமான தீர்வை - இடைக் கால நிலை என்னவென்றால், நாம் இருக்கும் நிலையில் அப்படியே நம்மை ஏற்றுக்கொள்வது, கீழ்ப்படியாதவர்கள், புரட்சிவாதிகள் என்பது போன்ற குற்றச்சாட்டுகளைச் சாட்டாமல்; ஏற்க இயலாத தடைகளுக்கு உட்படுத்தாமல் நாம் நம்மை ஏற்றுக்கொள்வது; இது சட்டரீதியாக முழுமை யான தீர்வாக இல்லாவிடினும், இடைக்காலத் தீர்வாக இருக்கும். எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண் டால், திருச்சபையின் "அவசரகால நிலை" என்று நாம் குறிப் பிடும் திருச்சபையின் அசாதாரண நிலையை, பாப்பானவர் மற்றும் பாரம்பரியம் குறித்தான சில மேற்றிராணியார்க ளுடைய பேச்சுக்களும், போக்குகளும் மீண்டும் உறுதி படுத்துகின்றன.

எதிர்காலத்தில் என்ன சம்பவிக்கும் என்பதைக் குறித்து நமக்கு ஒன்றும் தெரியாது. அறிவிக்கப்பட்டிருக்கிற வேத சத்தியங்கள் குறித்தான உரையாடல்கள் நல்ல கனிகளை தரும் என்ற நம்பிக்கையில், எமது தற்போதைய தற்காலிக நிலையை ஏற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

வலுத்த எதிர்ப்புகள் அடுத்துவரும் இக்கடினமான பாதையில் அன்பார்ந்த விசுவாசிகளே, மீண்டும் ஜெபத்தின் உதவியை நாட உங்களை அழைக்கின்றோம். **"இறுதியில் என் மாசற்ற இருதயம் வெற்றிபெறும்"** என்ற மகிழ்ச்சி யான விளைவு கிடைக்கும் என்று வாக்களித்துள்ள, பாத்திமா அன்னையின் செய்தியில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து, இன்னும் பெரிய ஒரு தாக்குதலை நடத்தும் நேரம் வந்திருக்கிறது என நாம் நினைக்கின்றோம். பாத்திமா அன்னையே கேட்டுக்கொண்டபடியான வழிமுறைகளான:

**பாப்பானவர் எல்லா கத்தோலிக்க மேற்றிராணிமார்க ளுடன் சேர்ந்து ரஷ்ய நாட்டை மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணித்தல் மற்றும் துயரம் நிறைந்த மாசற்ற இருதய பக்தியைப் பரப்புதல்** மூலமாக மாதா விடம் இந்த வெற்றியைக் கேட்கிறோம். ஆகையால்தான், இந்த நோக்கத்திற்காக இப்பொழுது ஈஸ்டர் திருநாள் தொடங்கி 2010 மார்ச் 25-ம் நாள் வரையுள்ள காலத்தில் 1,20,000 லட்சம் (12 மில்லியன்) 53 ஜெபமாலைகளை தேவமாதாவைச் சுற்றியிருக்கிற நட்சத்திரங்களுக்கேற்ப தினசரி வாழ்வின் பரித்தியாகங்களையும் நமது அந்தஸ்தின் கடமைகளை சரிவர நிறைவேற்றுவதாலும், அவர்களது மாசற்ற இருதயத்தின் மீதான பக்தியை பரப்புவதான வாக்குறுதியுடன் இணைத்து ஒப்புக்கொடுக்க நாம் முடிவு செய்துள்ளோம். பாத்திமாவில் அவர்களது காட்சிகளின் நோக்கமாக அவர்களே இதனை முன்வைக்கிறார்கள். அவர்கள் நம்மிடம் கேட்டுக்கொண்டவைகளை நாம் கவன முடன் நிறைவேற்றினால், நாம் எதிர்பார்க்கத் துணிவதை யும்விட அதிகமானவைகளையும், குறிப்பாக நமது ஆத்தும இரட்சண்யத்தையும், மாதா வாக்களித்துள்ள வரப்பிர சாதங்களால் நிச்சயித்துக்கொண்டவர்கள் ஆவோம்.

ஆகவே, நமது குருக்கள், ஒரு தனிப்பட்ட முயற்சியாக விசுவாசிகள், மாதத்தின் முதல் சனிக்கிழமைகளில் பரிகார நன்மை வாங்கி ஒப்புக்கொடுப்பது மட்டுமல்லாமல் மாதவின் மாசற்ற இருதயத்திற்கு தங்களையே அர்ப்பணம் செய்வதன் மூலமாகவும் நமதன்னையோடு ஆழ்ந்த ஐக்கியம் கொள்ளச் செய்யும் இந்த பக்திக்கான முயற்சிகளை விசுவாசிகள் எடுக்கத் தூண்டும்படியான தனிப்பட்ட முயற்சிகளை நமது குருக்களிடம் கேட்கிறேன்.

அமலோற்பவியின் பெரிய தூதராக இருந்த அர்ச். மாக்ஸிமிலியன் கோல்ப்பின் ஞானப் பாதையை நன்கு அறிந்து, பரப்பி நிலைகொள்ளும்படிச் செய்வது நன்மை யானதாகும்.

25 ஆண்டுகளுக்கு முன்பாக எமது சபை மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணம் செய்யப்பட்டது. சங். சுமிட்பெர்கர் சுவாமியின் மகிழ்ச்சியான இந்த முன்முயற்சியை, எங்கள் உள்ளங்களில் வைத்து, இந்த பக்தியின் உணர்வுகளால் எங்களது இதயங்களை நிரப்பவும், புதுப்பிக்கவும் விரும்புகிறோம். நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவ பராமரிப்பை கட்டளையிடும் கருத்தினை கொண்டிருக்கவில்லை என்பதனை இது உணர்த்தும். ஆனால் அர்ச்சியசிஷ்டவர்களின் முன்மாதிரி கையிலிருந்தும், பரி. சுவிசேஷத்திலிருந்தும் கற்றுக்கொண்ட தன்படியே, உந்நதமான ஆவல்கள் நல்ல ஆண்டவரின் திட்டங்களை துரிதப்படுத்துகின்றன. ஆகையால்தான் நமது இந்த கருத்தினை மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு முன்பாக தயங்காமல் சமர்ப்பித்து உங்கள் அனைவரையும் தனது தாய்க்குரிய பாதுகாப்பில் எடுத்துக்கொள்ளும்படியாக அவர்களை மன்றாடுகிறோம். சர்வேசுரன் உங்களை அபரிமிதமாய் ஆசீர்வதிப்பாராக!

நமதாண்டவர் சேசுக்கிறீஸ்துவின்
மகிமையான உயிர்ப்புத் திருநாளில்
**+ பெர்னார்டு ஃபெல்லே.**
**வினோனா, U.S.A.**
***2009***

## பரிபூரண பலன் !




***கேள்வி:*** பரிபூரண பலனை எத்தனை முறை பெற்றுக்கொள்ள முடியும்? அதனை பெறுவதற்கான நிபந்தனைகள் எவை?

***பதில்:*** ஞானபலன்களுக்கான திருச்சங்கத்தின் ஆணையின் படி ஒரு நாளைக்கு ஒரு பரிபூரண பலனை மட்டுமே பெறமுடியும். அதனைப் பெறுவதற்கான நிபந்தனைகள்:

ஒரு தேவாலயத்தை சந்தித்து (மேற்றிராசன கோவில், பங்கு ஆலயம் மற்றும் அதையொத்த ஆலயங்கள்) ஒரு பரலோக மந்திரமும், விசுவாச மந்திரமும் ஜெபித்தல். அதோடுகூட கீழ்வரும் சாதாரண நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

- நல்ல பாவசங்கீர்த்தனம் (முந்தியோ, பிந்தியோ உள்ள எட்டு நாட்களுக்குள்) செய்திருக்க வேண்டும்.
- திவ்விய நற்கருணை உட்கொள்ளவேண்டும்.
- பாப்பானவரின் சுகிர்த கருத்துகளுக்காக ஒரு பரலோக மந்திரம் அல்லது ஒரு அருள் நிறை மந்திரம் அல்லது வேறு ஏதேனும் செபம் சொல்லுதல்.
- அற்பப்பாவத்தின்மீது முதலாய் பற்றின்றி இருப்பது.

(குறிப்பு: இந்த நிபந்தனை குறைவுபட்டால் பகுதி பலனை (Partial Indulgences) மட்டுமே பெற முடியும்)

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)

## (16) தயையுள்ள கன்னிகையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

*தயை, தயாளம், இரக்கம், கிருபை, பரிவு என்பவை இரக்கம் என்ற பொருளைக் குறிக்கும் பல்வேறு சொற்கள். மற்றவர்கள் படும் கஷ்டங்களையும், துன்பங்களையும், வருத்தங்களையும் கண்டு வருந்தி தன்னால் இயன்ற உதவி செய்ய வருபவர்களை "தயாளர்", "இரக்கமுள்ளவர்" என்று மக்கள் போற்றுவார்கள். நமதாண்டவரும் "இரக்கமுள்ளவர் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்" என்று கூறுகிறார். இரக்கம் மிக அவசியம். இரக்கம் காட்டுபவர் ஆண்டவருக்கு உகந்தவர்கள் என்று கூறுகிறார். நமது தேவ அன்னை "தயையுள்ள - இரக்கமுள்ள கன்னிகை" என்று அழைக்கப்படுகிறார்கள். ஏனெனில் கன்னிமாமரியின் வாழ்க்கை "தயை நிறைந்த வாழ்க்கை" என்று கூறலாம். எப்படி? (1) கபிரியேல் தூதரின் மங்கள வார்த்தை - மனுக்குலத்தின் மீதான* **இரக்கத்தினால்** *'ஆகட்டும்' என்றுரைத்து தேவதாயானார்கள். (2) மனுக்குலத்தின் மீதான தயையால் மாதா தனது இருதயத்தில் ஏழு வியாகுல வாட்களால் குத்தப்பட்டு துயருற்றார்கள். (3) தமது உறவினளான எலிசபெத்திற்கு உதவ இரக்கத்தோடு சென்றார்கள். (4) கானாவூர் கலியாண வீடு கன்னிமாதாவின் இரக்கத்தால் மகிழ்ச்சியடைந்தது. (5) சிலுவையடியில் தேவ பிதாவுக்கு திருச்சுதன் செலுத்தும் பலியை மாதாவும் தன் மகனோடு சேர்ந்து செலுத்துகிறார்கள். அவ்வேளையில் தன் மகன் மானிடர்மேல் வைத்த கரைகாணாத அன்பே, இரக்கமே தேவதாயையும் ஆட்கொண்டது. (6) தமது திருக் குமாரனின் விண்ணேற்றத்திற்கு பின்னர் "பால" திருச் சபையை இரக்கத்தோடு வழிநடத்தினார்கள். (7) விண்ணுக் கும் மண்ணுக்கும் அரசியாக முடிசூட்டப்பட்ட பின்பு இன்னும் அதிகமாக ஒரு அரசிக்கேயுரிய பரிவிரக்கத்தால் மானிடர் நம்மை ஆபத்துகளிலிருந்து காத்து வ்ருகிறார்கள். நமது இக்கட்டு இடைஞ்சல்களில் நம்மை பாதுகாத்து வருகிறார்கள். அநேக இடங்களில் தரிசனம் வழங்கி நம்மை அடுத்துவரும் துன்பங்கள் - ஆபத்துக்களை அறிவித்து எச்சரித்து கடவுளின் திட்டத்தை கூறி வழிநடத்தி வருவதையும் நாம் அறிவோம்.*



*இப்படியாக தமது வாழ்நாள் முழுவதும் இரக்கமே - இரக்கச் செயல்களையே கொண்டுள்ள தேவதாயை திருச்சபை "தயையுள்ள (இரக்கமுள்ள) கன்னிகையே" என்று அழைக்கிறது.*

*அர்ச். பிரிஜித்தம்மாளுக்குக் காட்சியளித்த தேவதாய் நானே மோட்சத்தின் இராக்கினியாகவும், இரக்கத்தின் தாயாகவும் இருக்கிறேன்; நீதிமான்களின் ஆனந்தமாகவும், பாவிகளை சர்வேசுரனிடம் கொண்டுசெல்லும் வாயிலாகவும் இருக்கிறேன். எனது இரக்கத்தால் கைநெகிழப்படாத பாவி எவரும் இப்பூமியில் இல்லை என்று கூறினார்கள். இதனாலேயே தான் திருச்சபை அநேக மாதா திருநாட்களின் பிரவேச வாக்கியத்தில் "...ஆதலால் நாம் இரக்கம் பெறும்படிக்கும், அவசிய சமயத்துக்கு கிருபையைக் கண்டடையும்படிக்கும் அவருடைய கிருபை சிம்மாசனத்தை நம்பிக்கையோடு அண்டிப் போவோமாக" (எபிரே. 4:16) என்று ஜெபிக்கிறது.*

*அதோடு "கிருபைதயாபத்துக்கு மாதா" என்ற ஜெபத்தில் திருச்சபை ...உம்முடைய தயாளமுள்ள திருக்கண்களை எங்கள்பேரில் திருப்பியருளும்... கிருபாகரியே! தயாபரியே! பேரின்ப இரசமுள்ள கன்னிமாமரியே! என்று தேவதாயின் இரக்கத்தை பாடி துதித்து மன்றாடுகிறது. நாமும் திருச்சபையோடு சேர்ந்து தேவ அன்னையை:*

**"தயையுள்ள கன்னிகையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்"**

*என்று பிரார்த்திப்போமாக!*

# ‘Sanguis Martyrum Semen Christianorum’

## (வேதசாட்சிகளின் இரத்தம் கிறீஸ்துவர்களை விளைவிக்கும் வித்து!)

# கத்தோலிக்க விசுவாசத்திற்காக உயிர்நீத்தவர்களின் வரலாறு

**(இங்கிலாந்து நாட்டில் ஆங்கிலிக்கன் புராட்டஸ்டாண்ட் பிரிவினையின் போது சத்திய கத். விசுவாசத்தில் உறுதியாக இருந்து பதிதத்தை மறுத்து தங்களுடைய இன்னுயிரை நீத்தவர்களின் வரலாறு இங்கே வெளியிடப்படுகிறது.)**

## (6) அர்ச். பிலிப் ஹோவார்ட் (St. Philip Howard) 1557-1595.

அது 1581-ம் ஆண்டின் ஆகஸ்ட் மாத இறுதி நாள். லண்டன் டவர் சிறைச்சாலை மிகுந்த பரபரப்புக் குள்ளாகியிருந்தது. ஏதாவது ஒரு கைதிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படவிருக்கிறதா? அப்படி எதுவும் தெரியவில்லையே! முந்தினநாளிலிருந்தே படைவீரர்கள் வேறு அங்கே குவிக்கப்பட்டுள்ளனர்! புதிய கைதி யாராவது கொண்டுவரப்பட இருக்கின்றார்களா? அதுவும் இல்லையே! வழக்கத்துக்கு மாறாக சிறைச்சாலையின் St. Peter ad Vincula தேவாலயம் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளனவே? வழிபாடு எதுவும் நடைபெறவுள்ளதா? இங்கிலாந்து நாடு கத்தோலிக்க மதத்தை மறுதலித்த பின்னர் அங்கே வழிபாடு நடப்பதில்லையே! ஆனால் அங்கே இருமருங்கிலும் ஆசனங்கள் போடப்பட்டுள்ளனவே... அப்படியானால் அங்கே ஏதோ அரசவைக் கூட்டம் நடைபெறவுள்ளதா? அப்படி என்னதான் நடைபெறவுள்ளது...!



ஆம்! அங்கே தர்க்க வாக்குவாதம் நடைபெறவிருக்கிறது. அரசியின் புராட்டடஸ்டாண்ட் மத அறிஞர்களுக்கும், சிறைபிடிக்கப் பட்ட "கத்தோலிக்க சேசு சபை குரு" எட்மண்ட் காம்பியனுக்கும் தங்களது மதம்பற்றிய வாக்குவாதம் நடைபெறவிருக்கிறது.

தேவாலயத்தின் இருபக்கங்களிலும் அரசவை மந்திரி பிரதானி களும், உயர்குல பிரபுக்களும் மேன்மையான ஆசனங்களில் அமர்ந்திருக்க, ஒரு புறத்தில் ஆங்கிலிக்கன் புராட்டடஸ்டாண்ட் அறிஞர்களான டாக்டர் அலெக்சாண்டர் நோவெல் மற்றும் ரெவரண்ட் டாக்டர் வில்லியம் டே போன்றோர் தங்களது சீட பரிவாரங்களுடன் தயாராக இருந்தனர். அவர்கள் அருகே "பார்வைக்கு" வேதாகமங்களும், ஆவணங்களும், குறிப்புகளும் தேவையான நூல்களும் வைக்கப்பட்டிருந்தன. அரசி எலிசபெத்தின் வருகையை எதிர்பார்த்து அங்கே அமர்ந்திருந்த அரசவை பிரபுக்கள் தங்களது அந்தஸ்தை வெளிக்காட்ட தங்களை அலங்கரித்துக்கொண்டு வந்திருந்தனர். இத்தகைய கூட்டங் களில்தானே அவைகளை வெளிப்படுத்த முடியும். அங்கே அவர்களோடு முதல் வரிசையில் அமர்ந்திருந்தார், அரசியின் மனங்கவர்ந்தவரும், அரச குடும்பத்திற்கு இணையான செல்வாக்கும், செல்வசீரும் பெற்ற நார்ஃபோல்க் (Norfolk) வம்சத்தின் 5வது வாரிசும், புகழ்பெற்ற அருண்டேல் குடும்பத்தின் எர்ல் (Earl) பிரபுவும், ஆக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தில் கற்றுத் தேர்ந்த அறிஞருமான **சர். பிலிப் ஹோவார்ட் பிரபு**. அவர் அணிந்திருந்த உடை அலங்காரம் - அவரது இந்த அந்தஸ்தினை பறைசாற்றிக்கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் அங்கே சலசலப்பு ஏற்பட்டது. அனைவரது பார்வையும் ஆலய நடுவில் மெல்ல வந்து நின்ற உருவத்தின் மீது நிலைத்தன... ஆ! யார் இவர்? ஆம்! இவர்தான் எட்மண்ட் காம்பியன்! அவரா? ஒரு கணம் திகைத்துப்போனார் பிலிப் ஹோவார்ட் பிரபு. ஆஹா, தாம் படித்த ஆக்ஸ்போர்டின் பிரசித்திபெற்ற பேச்சாளர் - "இங்கிலாந்தின் இரத்தினம்" என்று அரசியால் புகழப்பட்ட காம்பியனா இவர்? உள்ளம் துணுக்குற கூர்ந்து பார்த்தார் பிலிப் - சிறைக் கொடுமையால் உடல் மெலிந்து தளர்ந்து சோர்வுடன் மெல்ல வந்த காம்பியனின் கைகளை இரும்பு விலங்குச் சங்கிலிகள் பிணைத்திருந்தன. அந்த காட்சியைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்து போனார் பிலிப் பிரபு. ஆ! அவர் செய்த குற்றம்தான் என்ன? எதற்கு இந்த தண்டனை? இந்த விவாதத்தின் முடிவில் அவருக்குக் கிடைக்கவிருப்பது மரண தண்டனைதானே? ஏன்? அவரது குற்றம்: அரசியின் புராட்டடஸ்டாண்ட் வேதத்தை ஏற்காமல் தமது கத்தோலிக்க விசுவாசத்தில் உறுதியாயிருந்தது - சேசு சபை குருவானது - மக்களை மனந்திருப்ப இங்கிலாந்து நாட்டுக்குள் நுழைந்தது. இவைகளே அவர் மீது சாட்டப்பட்ட தேச துரோகக் குற்றச்சாட்டுக்கள்!

விவாதம் ஆரம்பமாக... புராட்டஸ்டாண்டார் கேட்கும் அனைத்து கேள்விகளுக்கு தக்கப் பதில் கூறும் அவரது சிலாக்கியத்தைக் கண்டு அவையே வியந்தது. சத்திய விசுவாசத்தை நியாயப்படுத்தி தாம் எழுதி வெளியிட்ட சிறு நூலை விவரித்து அவர் தந்த கருத்துக்கள் எத்துணை ஆழமானவை. சத்திய கத். வேதத்தின் தெய்வீகத்தையும், அதன் மேன்மையையும் விளக்கி வாதிட்ட பேச்சுவன்மை யால் புராட்டஸ்டாண்டார் திக்குமுக்காடிப்போனார்கள். தமது நினைவாற்றலையும், தேவ உதவியையும் மட்டுமே கொண்டு வாதம் செய்யும் காம்பியன் சுவாமியின் வீர விசுவாசத்தைக் கண்டு பிலிப் பிரபு வியந்துபோனார். காம்பியனின் பிரமாணிக்கம், குருத்துவத்தின் பரிசுத்ததனம் எதிரிகளை நிலைகுலையச் செய்வதைக் கண்டு வியந்தார். அவரது பேச்சுக்கள், வாதங்கள் மெல்ல மெல்ல பிலிப் பிரபுவை மாற்றமடையச் செய்தது. கத்தோலிக்கராய் ஞானஸ்நானம் பெற்று விசுவாசத்தை இழந்து உலக மகிமை யைத் தேடி - கடவுளையே மறந்து வாழும் தமது அவல நிலையை உணரச் செய்தது.

தர்க்க விவாதத்தில் தம்மை **"ஆன்மாக்களுக்காக பயணம் செய்த உலகிற்கு மரித்த ஒரு மனிதன்"** என்று அழைத்துக்கொண்ட காம்பியன் சுவாமியின் ஆன்மதாகம் அவரை நெகிழ வைத்தது. காம்பியனுக்கு முன்னால் தன்னை ஒப்பிட்டு பார்க்க மனம் கூசிய பிலிப் வேதனையடைந்தார். தான் கொண்ட சத்திய விசுவாசத்தை ஆன்மாக்களுக்குப் போதிக்க விரும்பும் அவரது உயர்வுக்கு முன்பாக, தமது பட்டம், பதவி, படோபம் - செல்வம், ஆடம்பரம், உலக இன்பம் ஆகியவற்றையே வாழ்க்கையாக கொண்ட தம்மை - தமது நிலையை கண்டு ஒரு கணம் நடுங்கிப் போனார் பிலிப் பிரபு. இப்படியே நாம் வாழ்ந்தால்... ஐயோ நமது ஆன்மா என்னவாகும்? நமது நித்திய வாழ்வு எப்படிப்பட்ட தாக அமையும்?! ஐயோ! கலங்கினார் - தேவ வரப்பிரசாதம் தொட அப்போதே மனம் மாறினார்... ஆம்! ஆடம்பர பிரிய ராய் கடவுளின் வேதத்தை நெகிழ்ந்துவிட்ட பிலிப் ஹோ வார்ட் பிரபு அன்றே சர்வேசுரனைத் தேடினார் - தாம் மறுதலித்துவிட்ட சத்திய கத்தோலிக்க விசுவாசத்தை நாடினார்... அவரது வாழ்க்கை மாறியது...

எந்த ஒரு செயலுக்கும் எதிர் விளைவு உண் டல்லவா? ஆம்! மனம் மாறி, கத்தோலிக்க வாழ்வில் முனைந்த பிலிப் பிரபுவுக்கு அவை வந்து சேர்ந்தன... ஆம்! நான்கு வருடங்களில் அவரும் தமது கத். விசுவாசத் திற்காக இதே லண்டன் டவர் சிறையில் அடைக்கப்பட விருக்கிறார்! அங்கே குடும்பத்தைக் காண தவித்து 10 ஆண்டுகள் தனிமைச் சிறையில் வாடி வேதத்திற்கு சாட்சி யாக துன்புற்று தமது 35வது வயதில் மரிக்க இருக்கும் இந்த அர்ச்சியசிஷ்டவரின் வாழ்வு நமக்கு ஒரு முன்மாதிரிகை...

அவரது வரலாற்றை இங்கு காண்போம்!


## குடும்ப பெருமை!

இங்கிலாந்து அரச அரண்மனையின் சிற்றாலயமான "வொய்ட் ஹாலில்" ஞானஸ்நான சடங்கு நடைபெற்றது. அரச குலத்துக் குழந்தைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் தங்க முலாம் பூசப்பட்ட ஞானஸ்நானத் தொட்டியில் பிறந்து மூன்று மாதங்களே ஆன குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இங்கிலாந்தின் அரசியான மேரி டூடோர் (Mary Tudor) மற்றும் அவளது அமைச்சரவை சகாக்கள், பிரபுக்கள் அங்கே குழுமியிருந்தனர். ஸ்பெயின் நாட்டின் அரசரான 2-ம் பிலிப்பு ஞானத்தந்தையாக பொறுப்பேற்றுக் கொள்ளவே அக்குழந்தைக்கு "பிலிப்பு" என்ற பெயர் சூட்டப்பட்டது. ஞானஸ்நான சடங்கை நிறைவேற்றியவர், இங்கிலாந்து நாட்டின் சான்சலரும் இன்னும் சில ஆண்டுகளில் புரோட்டஸ்டாண்ட் நாடாக விருக்கும் இங்கிலாந்தின் கடைசி கத்தோலிக்க ஆயரும், யார்க் நகர அதிமேற்றிராணியாருமான மிக. வந். நிக்கோ லாஸ் ஹார்த் ஆண்டகையாவார். அப்படி என்ன அந்தக் குழந்தைக்கு சிறப்பு வந்தது? ஏனெனில் அக்குழந்தை அரச குடும்பத்திற்கு இணையான நார்ஃபோல்க் குலத்தின் 4வது பிரபுவான தாமஸ் ஹோவார்ட்டின் முதல் வாரிசு! கி.பி. 1557 ஜுலை 2-ம் நாளன்று பிறந்த அக்குழந்தை தனது வாழ்நாளில் வாரிசுரிமையாக பெறவிருக்கும் பட்டங்களும் செல்வங்களும் ஏராளம்!... ஏராளம்!


அந்தோ, குழந்தை பிறந்த 2வது மாதத்திலேயே அதன் தாய் இறந்து போனாள். தந்தை தாமஸ் இரண்டாவது திருமணம் முடித்தார். இந்த திருமணத்தின் மூலம் அவருக்கு 2 மகன்களும், ஒரு மகளும் பிறந்தனர். ஆனால் இந்த மனைவியும் மரணமடையவே இளைஞரான தாமஸ் 3வது திருமணம் செய்தார். இப்போது எலிசபெத் டாக்கர் (Dacre) என்ற பிரபு குல விதவையை மணந்தார். அவளுக்கு இறந்த முதல் கணவரின் மூலம் ஒரு மகனும், 3 மகள்களும் இருந்தனர். ஏற்கனவே செல்வந்தரான தாமஸ் தமது இந்த திருமணங்களால் இங்கிலாந்திலேயே அதிக செல்வம் படைத்தவராகத் திகழ்ந்தார்.

இப்போது இங்கிலாந்தின் கத்தோலிக்க அரசி மேரி இறக்கவே, அவளது ஒன்றுவிட்ட சகோதரியான முதலாம் எலிசபெத் ஆட்சி கட்டிலில் ஏறினாள். ஆனால் அவள் தனது தந்தை 8-ம் ஹென்றியைப் பின்பற்றி கத்தோலிக்கத் திருச்சபையை வெறுத்தாள். ஆங்கிலிக்கன் புரோட்ட ஸ்டாண்ட் மதத்தை புகுத்தி அதன் தலைவியாக தன்னை அறிவித்தாள். கத். வேதத்திற்கு தடைவிதித்து கத். தேவால யங்கள், துறவற கன்னியர் மடங்களை சூறையாடி குருக்களை நாடுகடத்தினாள். அவளது அரசவையில் தாமஸ் ஹோவார்ட் பிரபு மதிப்புமிக்கவராகத் திகழ்ந்தார். தமது மூத்த மகனான பிலிப்புவிற்கு சிறந்த கல்வியும் ஒழுக்கமும் புகட்டினார். ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தில் கல்வி கற்கச் செய்தார்.

12 வயது நிரம்பிய இளைஞனாகத் திகழ்ந்த பிலிப்பு விற்கு தமது 3வது மனைவியின் முதல் கணவரின் மகளான அன்னாவை திருமணம் செய்துவைக்க விரும்பினார். இதன் மூலம் தமது மனைவியின் அளவற்ற செல்வங்களும், திரவியங்களும், பட்டங்களும் தமது மகனுக்கு கிடைக்கும் என்று எண்ணினார். கத். விசுவாசத்தில் வாழ்ந்த அன்னா வுக்கும் கத்தோலிக்கராய் ஞானஸ்நானம் பெற்று புரோட்ட ஸ்டாண்ட் மனப்பான்மையுடன் இருந்த பிலிப்புக்கும் திருமணம் நடைபெற்றது. **(தொடரும்)**




# அர்ச். கிளாரம்மாள் சரிதை




**6.** சேசுவுக்காக ஒரு கன்னியராக வாழ ஆரம்பித்த கிளாராவை அர்ச். பிரான்சிஸ் அசிசியார் அங்கே யிருந்த ஆசீர்வாதப்பர் சபை கன்னியர் மடத்தில் தங்கவைத்தார். கிளாரா, முரடான துறவு உடை அணிந்து, காலனி அணியாத பாதங்களோடு தவ வாழ்வு வாழ்வதைக் கண்ட அந்த மடத்திலிருந்த கன்னியர்கள், பெரிதும் வியந்தனர். கிளாரா அவர் களை நோக்கி ‘‘நான் ஏழைகளிலும் ஏழை, சேசு வைப் போல வாழ விரும்புகிறேன்’’ என்று தாழ்ச்சி யோடு கூறினாள்.




**7.** கிளாரா வீட்டைவிட்டு வெளியேறியதால் அவளது உறவினர்கள் கோபம் கொண்டனர். பலவந்தப்படுத்தி மீண்டும் வீட்டுக்கு கூட்டிவர விரும்பினர். அதற்காக விலையுயர்ந்த நகைகள், வைரக்கற்கள், பட்டாடைகள் தருவதாக ஆசை காட்டினர்.

**8.** அவைகளையெல்லாம் மறுத்த கிளாரா சேசு நாதர் மட்டுமே எனது மணவாளர். உலகில் வேறு எந்த பொருளும் எனது மனதை மாற்றமுடியாது என்று கூறினாள். அப்போது முரட்டுத்தனமாக அவளை தூக்கிச் செல்ல முயன்ற சகோதரனிடம் தனது முக்காடைக் கழற்றி முடியற்ற தன் தலை யைக் காட்டினாள். வேதனையோடு உறவினர்கள் திரும்பினர்.






**9.** தன்னை காணவந்த அர்ச். பிரான்சிஸிடம் தம்மை இன்னும் ஏழ்மையான இடத்திற்கு அழைத்து செல்லும்படி கேட்டாள். எனக்கு மிகச் சிறிய அறையும் படுக்க சிறிது வைக்கோல் மட்டும் போதும் என்று கேட்டுக்கொண்டாள்.




**10.** அதன்படியே அவ்வூருக்கு வெளியே இருந்த பாழடைந்த அர்ச். தமியான் மடம் ஒன்றில் அர்ச். பிரான்சிஸ் அசிசியார் கிளாராவை தங்கவைத்தார். அங்கே தனிமையில் சேசுவோடு ஜெபதபத்தில் இணைந்து வாழ்ந்து வந்தாள். அவளது எளிய தவ வாழ்வை கண்ட அவ்வூர் மக்கள் வியப்பில் ஆழ்ந்தனர். அவளைப்பற்றிய செய்தி அப்பகுதி முழுவதும் பரவியது.







**11.** அதே சமயத்தில் கிளாராவின் பிடிவாதத்தைக் கண்டு வெறுப்படைந்து வேதனையுற்ற உறவினர்கள் மீண்டும் அவள் மனதை மாற்றப் பலவாறு திட்டமிட்டனர். அப்போது அங்கேயிருந்த அவளது இளைய சகோதரி ஆக்னஸ் அவைகளுக்கு மறுப்பு கூறி அவர்களது முயற்சியை தடை செய்தாள். தனது சகோதரி தேர்ந்தெடுத்த உந்நத வாழ்வை தானும் வாழ விரும்பி சேசுவிடம் மன்றாடி வந்தாள். அதற்கான சந்தர்ப்பத்தையும் எதிர்நோக்கியிருந்தாள்.




**14.** தங்கையின் நல்ல உள்ளத்தைக் கண்ட கிளாரா அவளிடம் ''சர்வேசுரனின் அன்புக்காக அநுதினமும் நமது சிலுவையை சுமக்கவும், வறுமையை நேசிக்கவும், துன்புறவும் மனதாயிருக்கவேண்டும்'' என்று கூறினாள். அதைக் கேட்டு மகிழ்ந்த ஆக்னஸ், ''உன்னைப் போல நானும் வாழ சர்வேசுரன் எனக்கு உதவுவாராக'' என்று தன் விருப்பத்தை வெளிப்படுத்தினாள். அன்றிலிருந்து ஆக்னசும் கிளாராவோடு மடத்தில் வாழ்ந்து வந்தாள்.

**12 & 13.** ஒருநாள் கிளாராவை சந்திக்கச் சென்ற ஆக்னஸ் அவளது தரித்திர வாழ்வைக் கண்டு ஆச்சரியமடைந்தாள். கிளாரா அவளை நோக்கி ''உலகை முழுவதுமாக மறுதலித்தவர்களுக்கு சர்வேசுரனுடைய வரப்பிரசாதமே போதுமானதாக இருக்கும்'' என்று கூறினாள்.

*(தொடரும்)*

# தேவ ஆராதனை முறைமை

## திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளின் காலம்

பாஸ்கு காலத்தில் மூன்றாவது பெரிய திருநாளாகக் கொண்டாடப்படுவது திவ்விய இஸ்பிரீத்துசாந்து உலகில் இறங்கிவந்த சம்பவமாகும். நமது ஆண்டவருடைய சீவியத்தின் பரம இரகசியங்களோடு இது உடன் சம்பந்தப்படாதிருப்பினும், திருச்சபை இதையும் அவருடைய பாஸ்கு வெற்றியோடு சேர்த்துக் கொண்டாடுவதற்கு ஏற்ற காரணமுண்டு.

நமது ஆண்டவர் இப்பூவுலகில் துவக்கிய இரட்சணிய வேலை இன்று பூர்த்தியான பலனைத் தருகின்றது. எப்படியெனில், தம்முடைய திருமரணத்தினாலும் உத்தானத்தினாலும் ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபையை அர்ச்சிக்கும்படி நமது ஆண்டவரும், பிதாவும் சேர்ந்து இஸ்பிரீத்துசாந்துவை உலகத்திற்கு அனுப்புகிறார்கள். யுகங்களின் ஆரம்பத்தில் உலகத்தில் ஒன்றுமில்லாதபோது, கடவுளுடைய ஆவியானவர் தண்ணீரின்மேல் அசைந்து செல்ல எல்லாம் உண்டானது போலவும், அர்ச். கன்னிமரியாயின்மேல் அவர் நிழலிட்டதால் தேவகுமாரன் மனிதனானது போலவும், இப்போது அவர் புதிதாக ஏற்பட்ட திருச்சபையின்மேல் இறங்கிவந்து அது கிறீஸ்துவின் முழுச்சாயலை அடையும்படி செய்கிறார்.

பிதா தம் வல்லமையினால் சகலத்தையும் படைத்தருளித் தம் பரிபாலனத்தால் அவைகளைப் பாதுகாத்து நடத்திவருகிறார். சுதன் உலக இரட்சகரென அறிவோம். இஸ்பிரீத்துசாந்து தமது பரிசுத்த வரங்களால் இரட்சணிய வேலையைப் பூர்த்தி செய்கிறார்.

எப்படியெனில், பிதா தம்முடைய திருக்குமாரனை அனுப்பி நம் அனைவரையும் பாவத்தினின்று இரட்சித்தபின், இன்னும் செய்யவேண்டிய வேலை ஒன்று இருந்தது. நம்மை ஒளியின் மெய்யான பிள்ளைகளாக்குவதற்கு ஞான ஜீவியத்தில் நம்மைப் பாதுகாக்கவேண்டியிருந்தது. கொடிய தரித்திரத்திலும் தாழ்மையிலும் உதித்த ஒருவனை தனவந்தன் ஒருவன் சுவீகாரஞ் செய்துகொண்டான் என்று வைத்துக்கொள்வோம். அவனுடைய கீழான குணம், நடையுடை பாவனை இவற்றை முழுவதும் சீர்படுத்துவதற்கு நீடிய காலமும் சாமர்த்தியமுள்ள ஆசிரியனும் மிக்க அவசியமாயிருப்பது போல், கடவுளின் பிள்ளைகளுக்குரியதும், சுபாவத்திற்கு மேலானதுமான ஜீவியத்திற்கு அழைக்கப்பட்ட மனிதனைப் பழக்கச் சிறந்த ஆசிரியன் வேண்டுமன்றோ! கெட்டுப்போன தன் இயற்கைச் சுபாவத்தின்படி மனிதன் உலக நாட்டமுள்ளவனாகவும், தன் சரீரத்தைத் திருப்திசெய்யத் தேடுகிறவனாகவும் இருக்கிறான். மிருகங்களுக்குச் சமமான நிலைக்குத் தாழ்ந்தும் சிற்றின்பப் பிரியனாகவும் இருக்கிறான். ஞானஸ்நானம் இந்த இயற்கை சுபாவத்தை அழிப்பதில்லை; மாற்றுவதுமில்லை. அதனால் பெற்றுக்கொண்ட புதிய ஜீவியத்தில் படிப்படியாக வளர்ந்து உலக நாட்டங்களினின்று விடுதலையாகி ஞானக் காரியங்களைச் சுகிக்க வேண்டியவனாகிறான். ஆனால் இவைகள் ஐம்புலனுக்கும் எட்டாதவை. ஞான காரியங்களாகிய இவற்றின் ஞான வழி வருத்தமாகத்தான் தோன்றும்; எனினும் அவைகளை உணர்ந்துகொள்ளத் தன் ஐம்புலன்களையன்று, விசுவாசத்தின் உதவியை நாடவேண்டும். இதற்காக நமக்குப் பிதாவினால் ஆசிரியராகக் கொடுக்கப்பட்டிருப்பவர் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவே. ஒரு தோட்டத்திற்கு ஒப்பான நமது ஆத்துமத்தில் வரப்பிரசாதத்தின் விதைகளைத் தெளித்து மலர்களான புண்ணியங்களும், கனிகளான நற்கிரியைகளும் விளைந்து பலனளிக்கச் செய்கிறவர் இவரே.

ஞானஸ்நானத்திலும் உறுதிப்பூசுதலிலும் திவ்விய இஸ்பிரீத்துசாந்து தம்முடைய ஏழு கொடைகளை நமக்குத் தந்து, தமது போதனைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி செய்கிறார். ஆனால் எல்லா வேலையும் இத்தோடு முடிந்துபோவதில்லை. நாம் நமது ஆசிரியருடன் ஒத்துழைத்து அவருக்கு எப்போதும் செவிசாய்த்து நடக்கவேண்டும். அவர் இருவகையில் நம்முடன் பேசுகிறார்: வெளியரங்கத்தில் திருச்சபை வழியாகவும், அந்தரங்கத்தில் தம் ஞான ஏவுதலாலுமே. ஆகையால் திருச்சபையின் நல்ல மக்கள் ஞான காரியங்களில் தம் மேய்ப்பர்களால் நடத்தப்பட்டு ஏகாந்தத்திலும் செபத்திலும் அவர் தங்கள் ஆத்துமத்தோடு பேசுவதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

### திருச்சபை பிறந்த நாள்

யூதர்கள் பாஸ்காவைப் புசித்ததும், செங்கடலைக் கடந்து ஐம்பதாம் நாள் சீனாய் மலையை அடைந்தபோது கடவுள் அவர்களுக்குத் தம் கற்பனைகளைத் தந்ததும், ஆகிய இந்த இரு சம்பவங்கள் யூத வேதத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. பாஸ்குத் திருநாளுக்குப்பின் ஐம்பதாம் நாளில் இக்கொண்டாட்டங்கள் நடைபெற்றதால் ஐம்பதாவது என்ற பொருள் கொண்ட பெந்தகோஸ்து என்ற பெயர் இந்நாளுக்கு உண்டாயிற்று. இப் பெரிய வைபவத்தைச் சிறப்பிக்க உலகத்தின் எத்திசையினின்றும் யூதர்கள் பரிசுத்த பட்டணத்திற்குத் திரளாக வருவது வழக்கம். இந்நாளில்தான் அறுவடை விழாவும் கொண்டாடப்பட்டது.

சர்வேசுரன் இதே நாளில் தமது திருச்சபையின் இரட்சணிய வேலையைச் சகலரும் அறியத் துவக்கச் சித்தங்கொண்டார். வாக்களிக்கப்பட்ட திவ்விய இஸ்பிரீத்துசாந்து யூதர்களும் புறஜாதியாரும் அறியும்படி திருச்சபையின்மேல் வெளிப்படையாய் இறங்கிவரச் செய்தார். கலக்கமும், பயமும் கொண்டிருந்த அப்போஸ்தலர்கள் வெளியே வந்து தைரியமாகக் கிறீஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர். இராயப்பரின் போதனையைக் கேட்ட 3000 பேர் அன்றே மனந்திரும்பினர்.

சீனாய் மலைமேல் கடவுளுடைய சட்டம் வெளிப்படுத்தப்பட்ட வருஷாந்தர திருநாளாகிய இன்று கிறீஸ்தவ வேதத்தின் புதிய ஏற்பாடும் உலகிற்கு அறிவிக்கப்படுகின்றது. ஆகையால் இன்று திருச்சபை பிறந்த வருஷாந்தர விழாவைக் கொண்டாடுகிறோம் எனலாம்.

**இக்காலத்தின் தேவ ஆராதனை முறை**

ஆராதனை முறை காலச்சக்கரத்தில் பாஸ்குத் திருநாளுக்குப்பின் பெரிய திருநாள் இதுவே. பெரிய சனிக்கிழமை நடந்ததுபோல் இதன் திருவிழிப்பு நாளில் ஞானஸ்நானம் வழங்குவதுண்டு. நெருப்பிற்கும் சிநேகத்திற்கும் அடையாள மான சிகப்பு நிற உடுப்புகள் அணியப்படுகின்றன. இஸ்பிரீத்துசாந்துவின் மகிமையைக் கொண்டாடும் அழகிய கீதம் எட்டு நாட்களிலும் ஒலிக்கின்றது. அப்போஸ்தலருடைய நடபடி ஆகமத்திலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள் திருச் சபையின் ஆரம்ப சரிதையை வருணிக்கின்றன. இந்த எட்டு நாட்களில் வேறு அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாட்கள் கொண்டாடப்படுவதில்லை.

---

# செய்திகள்

## ★ முதலாவது சமூகச் சுற்றுமடல் !

பாப்பரசர் 16–ம் ஆசீர்வாதப்பர் தனது முதல் சமூக சுற்றுமடலை ஜுன் 29–ம் நாளன்று வெளியிடவிருக்கிறார். உலக சமூகப் பிரச்சினை களை விசுவாசக் கண்கொண்டு எதிர்கொள்வது எப்படி என்பதைப் பற்றிய கருத்துக்களைக் கொண்டதாக அது இருக்கும் என்று தெரிகிறது.

## ★ பாரம்பரிய குருப்பட்டம் !

பிரான்ஸ் நாட்டிலுள்ள பெல்லேக் Bellaigue என்னுமிடத்திலுள்ள பாரம்பரிய அர்ச். ஆசீர்வாத சபையைச் சேர்ந்த துறவியான **டோம் ஆன்சொல்ம்** என்பவர் மே 3–ம் தேதியன்று குருப்பட்டம் பெற்றார். அர்ச். 10–ம் பத்திநாதர் குருக்கள் சபையின் பொது சிரேஷ்டர் மிக. வந். பெர்னார்டு ஃபெல்லே ஆண்டகையவர்கள் குருப்பட்டம் வழங்கினார்கள்.

## ★ கத்தோலிக்க பல்கலைக்கழகத்தின் துர்மாதிரிகை !

அமெரிக்காவின், நியூயார்க் நகரிலுள்ள புகழ்பெற்ற கத்தோலிக்க **நோட்டர்டாம்** பல்கலைக்கழகத்தின் கல்வியாண்டின் துவக்க விழா மே 17–ம் தேதி நடைபெறுகிறது. அதற்கு சிறப்புரை ஆற்றி கௌரவப்பட்டம் பெற அமெரிக்க ஜனாதிபதி பாராக் ஒபாமா அவர்கள் அழைக்கப்பட்டு இருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஒபாமா தாய் வயிற்றிலும் சிசு கொலையை ஆதரிப்பவர் என்பதே இதற்குக் காரணம் !

இந்த துர்மாதிரிகைக்கு தனது எதிர்ப்பை தெரிவிப்பதற்காக பரிசுத்த ஸ்தானத்திற்கான (வத்திக்கான்) அமெரிக்க முன்னாள் தூதரான மேரி ஆன் கிளிண்டன் அவர்கள் அப்பல்கலைக்கழகம் அதே வைபவத்தின் போது தனக்கு வழங்கவிருந்த Laetare Medal பதக்கத்தை ஏற்க மறுத்து தனது விசுவாச ஒழுக்க நிலைபாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

## குடும்பங்களை அழிக்கத்தேடும் வேத விரோதிகள் !

**தனது மனந்திரும்புதலுக்கு முன்பு, வேத விரோதி ஒருவன் சேசுவின் திருஇருதய அப்போஸ்தலரான சங். மத்தேயு சுவாமி அவர்களிடம் கூறியதாவது: "எங்களுடைய நோக்கம் ஒன்றே ஒன்றுதான். கிறீஸ்தவ குடும்பங்களை, கிறீஸ்துநாதர் இல்லாத ஒரு அமைப்பாக மாற்றுவதே. தேவாலயங்களையும், பேராலயங்களையும் மற்றும் அதன் உடைமைகளையும் கத்தோலிக்கர்கள் வைத்துக்கொள்ளட்டும்; அவர்களது குடும்பங்கள் நமக்கு கிடைப்பது போதுமானது. அவர்களது குடும்பங்களை மேற்கொண்டால் திருச்சபை மீதான எங்களது வெற்றி உறுதிப்படுத்தபட்டுவிடும்"**

# அர்ச். பத்தாம் பத்திநாதரின் திருச்சபையைக் குறித்தான ஆவல்கள்!

(அர்ச்.10–ம் பத்திநாதர் பாப்பரசரின் திருச்சபை எப்படியிருக்கவேண்டும், நவீனர்களால் அது எவ்வாறு பாதிக்கப்படும் என்பதையும், அதனை எதிர்த்து பாப்பரசரின் முயற்சிகள் மற்றும் அவரது ஆவல்களைப்பற்றி வந்.மே. திஸ்ஸியர் தே மலரே ஆண்டகையவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்தின் தமிழாக்கம் இங்கே வெளியிடப்படுகிறது. இந்தப் பிரசங்கம் 2003–ம் ஆண்டு நவம்பர் 16–ம் நாளன்று பிரான்ஸ் நாட்டு கோல்மா நகரில் அர்ச். ஜோசப் இல்லத்தில் நிகழ்த்தப்பட்டது. ஆர்.)

## 5

### 2–ம் அருள் சின்னப்பரும், பொய் மதங்களும்!

காலம்சென்ற பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பர் சென்ற நூற்றாண்டின் (அதாவது 20-ம் நூற்றாண்டின்) இறுதியில் பிறக்கவிருக்கும் 21-ம் நூற்றாண்டிற்குத் தயாரிப்பாக Tertio Millennio Adveniente *(10, நவம்பர் 1994)* என்ற ஒரு அப்போஸ்தலிக்கச் சுற்றுமடலை எழுதினார். அதிலிருந்து நான் எடுத்துக்காட்டவிருக்கும் வரிகள் பத்து வருடங்கள் கடந்திருந்தாலும், இன்னும் திருச்சபை இருக்கும் நிலையின் கனாகனத்தை உங்களுக்கு புரியவைக்கும். "உலகில் உள்ள எல்லா மதங்களின் ஏக்கத்தை - தேடுதலை பூர்த்திசெய்வது கிறீஸ்துவே. இவர் ஒருவரே அவைகளின் ஏக திட்டவட்டமான முழுமை" (எண்: 6)



மேலே சொன்ன வாக்கியங்களில் இரண்டு கருத்துக்கள் உள்ளன: முதலாவது, "உலகில் உள்ள எல்லா மதங்களின் ஏக்கத்தை - தேடுதலை பூர்த்திசெய்வது கிறீஸ்துவே". இது முற்றிலும் தவறானதாகும். ஏனென்றால் இந்த உலக மதங்கள் அனைத்தும் பொய்யானவை என்பதும், சேசுக்கிறீஸ்துவை அவைகளுடைய நிறைவாகக் கொள்வதில்லை என்பதையும் நாம அறிவோம். உண்மை என்னவென்றால், அவை அவரை மறுத்து நிராகரிக்கின்றன. யதார்த்த நிலை இப்படியிருக்க கிறீஸ்துவானவர் மற்ற சமயங்களின் ஏக்கத்தை பூர்த்திசெய்பவர் என்று எப்படி சொல்லமுடியும்? இத்தகைய மதங்கள் நமதாண்டவரை மறுதலிக்கின்றன. தாங்கள் மறுதலிப்பவரை, எப்படி ஏக்கத்தோடு தேடமுடியும்? தாங்கள் விரும்பாத ஒரு பொருளை யார்தான் ஏக்கத்தோடு தேடுவார்?

ஒருநாள் இரயில் வண்டியில் பயணம் மேற்கொள்ளும்போது முகமதியர் சிலரை சந்திக்கநேரிட்டது. எனது அங்கியைக் கண்ட அவர்கள் முகம் சுழித்தனர்! அவர்களிடம் செய்த உரையாடலில் "நல்ல ஆண்டவர் நம்மை இரட்சிக்க விரும்பினால், அதற்குத் தேவையான அனைத்துக் காரியங்களையும் செய்திருப்பார். தானே பூமிக்கு வர வேண்டியதிருந்தாலும் - அதையும் செய்திருப்பார்தானே" என்று கூறினேன். நான் குறிப்பிட்டது சர்வேசுரனுடைய மனிதாவதாரத்தைப் பற்றி! அவர்களுக்கோ அது தேவதூஷணம்!! நாம் சற்று முன்பு கூறியது போல, இந்த முகமதியனுக்கு, அவனது தேடுதலுக்கு - ஏக்கத்துக்கு பூர்த்தியானவர் கிறீஸ்துவாக இருக்கமுடியுமா? என்ன முரண்பாடு!

2-ம் அருள் சின்னப்பர் வெளியிட்ட இரண்டாவது கருத்து: "அவர் ஒருவரே (கிறீஸ்துவே) அவைகளின் ஏக திட்டவட்டமான முழுமை". இஸ்லாமியத்துக்கும், பௌத்த மதத்துக்கும் கிறீஸ்துவே முழுமை - நிறைவு என்று எப்படிக் கூற முடியும்? நிச்சயமாக முடியாது. அவர்களது ஏக்கங்களே கிறீஸ்துவிடம் வருவதற்குத் தடைச்சுவர்களாக இருக்கின்றன. அவர்கள் அவரது தெய்வீகத்தை மறுக்கிறார்கள்; மகா பரிசுத்த தம்திரித்துவ சர்வேசுரனை நிராகரிக்கிறார்கள். கடவுளை நம்பாத பௌத்த மதத்தவர்கள் எப்படி கிறீஸ்துவுக்காக ஏக்கம் கொண்டிருக்க முடியும்? இது அறிவீனம். இது கண்டிக்கத்தக்க வாக்கியம். இப்படி கண்டனம் பெறக்கூடிய வாக்கியங்கள் எப்படி பாப்பானவரின் ஆவணத்தில் இருக்கமுடியும்? நிலைமை எவ்வளவுக்கு மோசமாகி உள்ளது என்பதை பாருங்கள்.

இது வெறும் லத்தீன் பூசையைப் பற்றியதோ அல்லது, லத்தீன் பூசை வைப்பதற்கு தரப்படும் அனுமதியைப் பற்றியதோ அல்ல. உரோமையில் தப்பறைகள் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு, உலகெங்கிலும் பரவிக்கொண்டிருக்கின்றன. "உலகில் உள்ள எல்லா மதங்களின் ஏக்கத்தை பூர்த்திசெய்வது கிறீஸ்துவே" என்பது போன்றவற்றை உரோமை தலைமை ஸ்தானம் ஆமோதித்தால் பிறகு எல்லா மேற்றிராணிமார்களும், குருக்களும் அதனையே திரும்பச் சொல்ல, விசுவாசிகள் அனைவரும் அதனை ஏற்றுக்கொள்கிறார்கள். அதனால் தங்களது விசுவாசத்தை இழக்கிறார்கள்.

**தொடர்ச்சி 16–ம் பக்கம் காண்க ...**

# ஞான குழந்தைத்துவத்தின் சிறிய வழி!

(அர்ச். குழந்தை சேசு தெரேசம்மாள் காட்டிய ஞான குழந்தைத்துவம் (Spiritual Childhood) என்ற சிறிய வழியைப் பற்றிய விளக்கம். அர்ச். தெரேசம்மாளையும், அவளது சொந்த சகோதரிகளையும் நன்கு அறிந்தவரான சங். மார்டின் சுவாமி என்பவர் எழுதிய " The Little way of Spiritual Childhood" என்ற நூலின் தமிழாக்கம். ஆர்.)

**இரண்டாம் அத்தியாயம்**

**மிகச் சிறிய ஆன்மாவின் வலிமையின் இரகசியமாகிய இருதய தாழ்ச்சி, எவ்வாறு அதனை சிறிய வழியில் நடப்பித்து, சேசுநாதருடைய சகாயங்களை அதன்மேல் வருவிக்கிறது என்பதன்பேரில்:**

மிகச் சில ஆன்மாக்களே, இத்தகைய குழந்தைக்குரிய சிறியத்தன்மையை நிபந்தனையின்றி முழுமையாக ஏற்றுக்கொள்கிறது. தங்களுடைய பலவீனத்தையும், உதவாத்தன்மையையும் அறியும்போது அவைகளை மிகுந்த சந்தோஷத்தோடு மனமுவந் ஏற்றுக்கொள்கின்றன. பெரும்பான்மை யான ஆன்மாக்கள், தங்களை பலவீனர்கள் என்று மனமுவந்து அங்கீகரித்துச் கொள்கிறார்கள். ஆனால் ஒரு குறிப்பிட்ட அளவிற் மட்டுமே அப்படி ஏற்றுக்கொள்கிறார்கள். அநே நேரங்களில், அடிக்கடி தங்களின் சொந்த பலத்தை நினைத்துக்கொண்டிருக்க விரும்புகிறார்கள். காரியங்கள் அனைத்தும் தங்களது விருப்பத் திற்கு ஏற்ப நடந்து வரும்போது, மிகத் தாராள மனதுடையவர்களாய், பக்குவமான மனநிலை கொண்டவர்களாய் காணப்பட்டு முழுமன தோடு விசுவசிக்கிறார்கள். சங்கீத ஆசிரியர் சொல்வதுபோல நிறைவின் மத்தியில் எதுவும் அவர்களை விழத்தாட்டாது. ஆனால் சில மன நேரங்கள் கழித்து மனக்கசப்பும் சோர்வும் வந்தாலே அல்லது குறிப்பிட்ட ஒரு பிரச்சினை வந்தாலோ தாங்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டதாக கற்பனை செய்கி றார்கள் தடுமாறி பின் விழுவதுபோல, இவர்கள் முதலில் தவறுகளில் விழுந்து பின்னர் தளர்ச்சியடைகிறார்கள்.



இத்தகைய ஆன்மாக்கள் மெய்யான தாழ்ச்சியை அறிந்துகொள்ளவில்லை. வளர்ந்துவரும் குழந்தையின் பலம் அதனுடைய பலவீனத்தில்தான் இருக்கிறது என்பதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. குழந்தையின் பலவீனம் மற்றும் உதவியற்ற நிலைக்கு ஏற்பதான் நாம் அதற்கு உதவ ஆர்வத்தோடு செல்கிறோம் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை. தற்போதுதான் பிறந்துள்ள குழந்தைக்கு காட்டும் கவனமும், அக்கறையும் நன்றாக வளர்ந்துவிட்ட குழந்தைக்கு நாம் செலுத்துவதில்லை.

அதுபோலவே சிருஷ்டிகர் மிகச்சிறிய, பலவீனமான ஆன்மாவிற்கு உதவ மிகுந்த அன்போடு வருகிறார். இங்கே பழமொழி ஆகமத்தில் சர்வேசுரன் கூறுவதைக் கேளுங்கள். "யாதொருவன் மிகச் சிறியவனாக இருக்கிறானோ, அவன் என் அண்டையில் வருவானாக. ஆனால், இந்த சிறிய ஆன்மாவிற்கு என்ன செய்யப்போகிறார்? எதற்காக தனதண்டையில் வரும்படி அழைக்கிறார்? நமது அர்ச்சியசிஷ்டவர்கள் இதை அறிய முயன்றால், எல்லா தகப்பன்மார்களுக்கு முன்பானவரும், அவர்களுக்கும் மேலானவராயிருக்கும் தந்தையான சர்வேசுரனுடைய ஆராதனைக்குரிய இருதயத்தின் நேசத் துடிப்புகளைக் கேட்டறிந்து, தனது கேள்விக்கான பதிலை அறிந்து, தன்னுடைய சிறிய வழியின் இரகசியத்தைக் கண்டு பிடித்தாள். **"ஒரு தாய் அவளது மகவை சீராட்டுவது போல், நான் உன்னை தேற்றுவேன்" என்ற கூறுகிறார் ஆண்டவர்.** ஆண்டவர், **நான் உன்னை "என் மார்பில் வைத்து சுமந்து செல்வேன், எனது மடியில் உன்னை தாலாட்டுவேன்".** இந்த வாக்கியங்களை மேற்கோள் காட்டிய பிறகு அவள் கூறுவது என்னவெனில்: "ஆ! இதைவிட மேலான இனிமையானதும், இதமானதும், என் ஆன்மாவை மகிழ்ச்சிப்படுத்துவதுமான வார்த்தைகளை ஒருபோதும் கேட்டதில்லை" என்று உண்மையாகவே, அவள் அவளது மிகவும் ஆர்வமான ஆவல்களின் நோக்கத்தை இவைகளிலிருந்து

கண்டுபிடித்தாள். சர்வேசுரனிடம் செல்வதற்கான நேரிய, மிகவும் சிறிய வழியைத் தேடினாள்; இதைவிட சிறந்த வழியில் செல்லவேண்டுமென்றால், கரடுமுரடான உத்தமதனத்தின் பாதையில் ஏறிச் செல்வதற்கு தான் மிகச் சிறியவளாக இருப்பதை உணர்ந்த அவள், தன்னை மேலே, சேசுவிடம் கொண்டுசெல்ல ஒரு ஏணியை கண்டுபிடிக்க விரும்பினாள். நித்திய ஞானமானவரின் வார்த்தைகளே அவளுக்கு அதனைக் காட்டிக்கொடுத்தது: **"ஓ சேசுவே! மோட்சம் மட்டும் என்னைத் தூக்கிச் செல்வது உமது கரங்களே! இதற்காக நான் பெரியவளாக வளரவேண்டிய அவசியமில்லை மாறாக மேலும், மேலும் சின்னஞ்சிறியவளாக மாறும்பொருட்டு, நான் சிறியவளாகவே இருப்பது அவசியம்."**

இந்த கடைசி வார்த்தைகள் கவனமாகக் குறித்துக்கொள்ளப்படத் தக்கதும், மிகுந்த கவனம் செலுத்தத்தக்கதுமாக இருக்கின்றன. ஏனெனில் அவை ஞான குழந்தைத்துவ ஜீவியத்தின் மிகவும் முக்கியமான இரகசியங்களில் ஒன்றைக் கொண்டுள்ளன. **"...நான் பெரியவளாக வளரவேண்டிய அவசியமில்லை; மாறாக மேலும்,மேலும் சின்னஞ் சிறியவளாக மாறும்பொருட்டு, நான் சிறியவளாகவே இருப்பது அவசியம்..**

மேலும் இங்கே இயற்கையான வாழ்க்கைக்கும், ஞான வாழ்வுக்கும் இடையே முக்கியமான வேறுபாடு இருப்பதை நாம் கவனிக்கவேண்டும். முதலாவதான இயற்கையான வாழ்வில் யாரும் எப்போதும் சிறியவ ராகவே இருப்பது என்பது முடியாதது. அதில் தேவை யான வளர்ச்சியினால் விரைவிலோ அல்லது சற்றுப் பிந்தியோ, அனைவரும் குழந்தைத்துவத்தைக் கடந்து வெளியேறவேண்டும். மாறாக இரண்டாவதான, ஞான வாழ்வில் வயதாகி நாம் வளர்கிறோம், மேலும் நாம் ஞானவாழ்வில் முன்னேறவேண்டுமானால், சிறியவராக இருப்பது அதிக அவசியமாகிறது. இங்கே முன்னே எடுத்துவைக்கும் அடியானது தாழ்ச்சி என்ற புண்ணியத்தில் வளர்தல் என்ற முதன்மையான அடையாளத்தைக் கொண்டிருக்கவேண்டும். மேலும் கூறுவோமேயானால், நமது ஒன்றுமில்லாமையைத் தெளிவாக கண்டுணர்தல் ஆகும். எந்த அளவிற்கு ஆத்துமம் தனது பலவீனத்தை, அவலநிலையை அறிய விரும்புகிறதோ அந்த அளவிற்கு பற்றியெரியும் உருமாற்றும் சிநேகத்தின் செயல்பாடுகளுக்கு அது பாத்திரவானாயிருக்கும்.

(தொடரும்)

**பிதாவே, பரலோகத்துக்கும், பூலோகத்துக்கும் ஆண்டவரே! உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். ஏனெனில் நீர் இவைகளை ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் மறைத்துச் சிறியோர்களுக்கு வெளிப்படுத்தினீர்.** (மத். 11:25)

**14-ம் பக்கம் தொடர்ச்சி . . .**

*சர்வேசுரனிடம் இட்டுச்செல்லும் ஒரே மெய்யான மதம் உள்ளது. கிறீஸ்துநாதரே அதனுடைய வழியாகவும், சிரசாகவும் இருக்கிறார். இரட்சிக்கப்படுவதற்கு அதனு டைய உறுப்பினராக இணைந்திருப்பது அவசியம் என்பவற்றை யார் அவர்களுக்கு நினைவுபடுத்துவது? - போதிப்பது? நாம் பிளக்கப்பட்டுள்ளோம், நமக்கும் அவர்களுக்கும் இடையே பெரிய பாதாள இடைவெளி இருக்கிறது.*


*திருச்சபை விசுவாசத்தில் உறுதியாய் இருப்பதற்கு ஆசித்த அர்ச். 10-ம் பத்திநாதர் காண்பித்த வழி நமக்கு எவ்வளவு அவசியமாக இருக்கிறது! எனவே அர்ச். 10-ம் பத்திநாதர் விரும்பியது போல மீண்டும் நமது ஞானோப தேசத்தை கையில் எடுப்போமாக. ஞாயிறு தோறும் தேவாலயங்களில் ஞானோபதேசம் கற்றுக்கொடுக்கப் படவேண்டும் என்று அவர் விரும்பினார். நம்மால் எல்லா இடங்களிலும் அவ்வாறு செய்யமுடியாவிட்டாலும், நமது குழந்தைகளுக்கு நமது பள்ளிக்கூடங்களில் உண்மையான ஞானோபதேசம் கற்பிப்போம். அர்ச். 10-ம் பத்திநாதர் எதிர்கால குருக்களுக்கு, திருச்சபையின் வேதபாரகர்களும், மத்திய கால டோமினிக்கனும் திருச்சபையின் பிரகாசமு மான அர்ச். தாமஸ் அக்வினாஸின் வேதசாஸ்திரக் கல்வி போதிக்கப்படவேண்டும் என்று விரும்பினார். ஏனெனில் கத். விசுவாசத்தை கற்பிக்கக்கூடிய மிக தப்பாத வழி இதுவே!*

*நவீனத்தை கண்டனம் செய்தல், ஞானோபதேசம் போதித்தல், திருச்சபை உறுதியடையச்செய்ய குருமடக் கல்வி அர்ச். தாமஸ் அக்வினாஸின் முறைப்படி அமைப்பது போன்றவைகளே அர்ச். 10-ம் பத்திநாதரிடமிருந்து வெளிப்பட்ட வல்லமையாகத் திகழ்ந்தன!*

(தொடரும்)

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை

## அறிந்து கொள்வோம்!



[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]

### முதல் பாகம்

#### இரண்டாம் பிரிவு (உபதேசப் பாகம்)

### 7. படிக்கீதம், அல்லேலூயா, நெடுங்கீதம், தொடர்கீதம்

#### தொடர் கீதம் – (Sequence)

*சில நாட்களில் அல்லேலூயாவின் மகிழ்ச்சியான வாழ்த்துதலோ அல்லது படிக்கீதத்தின் தொடர்ச்சியான துயரத்தின் இராகமாக நீண்ட பாடல்களாகப் பாடப்படலாம். இது பொதுவாக "தொடர் கீதம் - Sequence" என்று அழைக்கப்படுகிறது. மகிழ்ச்சியோ அல்லது துயரத்தின் உணர்வுகளோ ஆழமாக தெளிவான விளக்கத்தோடு இந்த தொடர் கீதத்தில் விளக்கப்படுகிறது.*

*இந்த தொடர் கீதம் எப்போதிலிருந்து திருவழிபாட்டில் சேர்க்கப்பட்டது என்பதை காண்போம். 9-ம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே எந்த ஒரு வாக்கிம் இல்லாமல் "அல்லேலூயா"வின் கடைசி உச்சரிப்பு (Syllable) தொடர்ச்சியாக இராகத்தோடு நீட்டிப்பாடுவது வழக்கமாக இருந்தது. இப்படி ஒரு உச்சரிப்பை (வார்த்தையில்லாத) இராகமாக படிப்பது Neuma, Jubilus, Jubilatis மற்றும் Sequentia என்று பல்வேறு பெயரில் அழைக்கப்படுகிறது.*



*இவை - இந்த வார்த்தைகள் இல்லாத பாடல்கள் - இராகங்கள் ஆன்மாக்களை பரிசுத்த உணர்வுகளால் நிரப்புவதாக உள்ளன. அவை முத்திப்பேறு பெற்றவர்களின் மகிழ்ச்சியின் வடிவமாகத் திகழ்கின்றன. மனிதர்களின் குறைபாடா, சரியாக விளக்கிக் கூறமுடியாத, முடிவில்லாத, சொல்ல முடியாத மோட்ச மகிமையை, மகிழ்ச்சியை உரைக்கும் வார்த்தைகளில் விளக்கமாக இந்த இராகம் இருக்கிறது. பின்னர், அதாவது 9-ம் நூற்றாண்டில் பல்வேறு கீதங்கள் சேர்த்து இசைக்கப்படும் பழக்கம் தோன்றியது. இத்தகைய இராகத்தோடு சேர்ந்த பொருள் பொதிந்த வாக்கியங்களாகக் கொண்ட கீதங்களே தொடர் கீதம் - Sequence என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இத்தகைய கீதங்கள் எழுதப்பட்டு பூசை வழிபாட்டில் சேர்க்கும் பழக்கம் அர்ச். கால் (Gall) என்ற சபையின் துறவியான அர்ச். நாட்கர் (St. Notker +912) என்பவரால் துவக்கப்பட்டது. அவர் காலத்தில் இவருக்கு இணையாக எவரும் இல்லாததால் அவர் "இஸ்பிரீத்துசாந்துவானவரின் பாத்திரம்" என்று அழைக்கப்பட்டார். இத்தகைய கீதங்கள் மக்களின் பாராட்டுக்களையும், வரவேற்பையும் பெற்றதால் பல இடங்களில் அவைகளின் பிரதிகள் எடுக்கப்பட்டது. Septuagesima தவிர மற்ற எல்லா பிரதி ஞாயிறு பூசைகளிலும் மற்றும் திருநாட்கள் ஒவ்வொன்றிலும் தொடர் கீதம் பாடப்பட்டு வந்தது. இசை தெளிவாக அற்புதமான பாடலாக இசைக்கப்பட்டன.*

*ரோமன் பூசைப்புத்தகம் திருத்தப்பட்டபோது, ஐந்து தொடர் கீதங்கள் மாத்திரம் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஒரு குறிப்பிட்ட - தனிப்பட்ட திருநாட்கள் (உயிர்ப்பு ஞாயிறு, பெந்தேகோஸ்த் ஞாயிறு, திவ்விய நற்கருணை திருநாள் (Corpus Christi) வியாகுல மாதாவின் இரண்டு பூசைகள், மற்றும் துக்கப்பூசைகளிலும் தொடர் கீதங்கள் பாடப்பட்டன.*

*உயிர்ப்பு - பாஸ்கு ஞாயிறு பூசையில் படிக்கப்படும் "Victimae Paschali laudes - பாஸ்குவின் திவ்விய பலிப்பொருளை..." என்ற தொடர் கீதம் கி.பி. 1050-ம் ஆண்டு, 2-ம் கான்ராடு அரசவையின் குருவான சங். பர்கண்டியின் வீப்போ (Wipo of Burgundy) என்பவரால் எழுதப்பட்டது. மிகவும் தொன்மையான பாடலான இது "நமது பாஸ்காவாகிய கிறீஸ்துநாதர் பலியிடப்பட்டிருக்கிறார்..." என்ற அல்லேலூயா கீதத்தின் விரிவாகத் திகழ்கின்றது!*

*திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாள் பூசையில் படிக்கப்படும்* "Veni Sancte Spiritus - *திவ்விய இஸ்பிரீத்துசாந்துவே, எழுந்தருளி வாரும்...*" *என்ற தொடர் கீதமானது, பிரான்ஸ் நாட்டு அரசர் இராபர்ட் (+1031) என்பவரால் எழுதப்பட்டது. என்றும்; 1198-ல் 3-ம் இன்னொசண்ட் பாப்பரசரால் ஏற்படுத்தப்பட்டது என்றும்; 1228-ம் ஆண்டு காண்டர்பரி அதிமேற்றிராணியாரான வந். ஸ்டீபன் லாங்டான் ஆண்டகையால் உருவாக்கப்பட்டது என்றும் (காண்க:* The Liturgy of the man - Pius Parsch 1957 *பக்.156) பல்வேறாகக் கூறப்பட்டாலும் இந்த மிகவும் உந்நத தெய்வீகமான தொடர் கீதம்* "Veni Sancte Spiritus - *நீர் உமது இஸ்பிரீத்துவானவரை அனுப்புவீர்...*" *என்ற அருமையான அல்லேலூயா கீதத்தை பிரதிபலிப்பதாக உள்ளது.*

"Veni, Sancte Spiritus, et emitte caelitus lucis tuae radium.

*திவ்விய இஸ்பிரீத்துசாந்துவே தேவரீர் - இந்தப்*
*பாரி லெழுந்தருளும்*
*வருவித்தருளும் எம்மேல் - உந்தன்*
*வானொளிக் கதிரினையே.*

Veni, pater pauperum, veni, dator munerum, veni, lumen cordium.

*சாற்றும் வறியவர்க்கு - நல்ல*
*தந்தையே, வந்தருளும்*
*ஏற்றுக் கொண்ட வள்ளலே - எங்கள்*
*இருதயத்தின் ஒளியே.*

Consolator optime, dulcis hospes animae, dulce refrigerium.

*பாவிகள் தேற்றரவே - தேவ*
*பரம விருந்தாடியே*
*சீவியமே, அடியோர் - எங்கள்*
*செல்வ இளைப்பாற்றியே.*

In labore requies, in aestu temperies, in fletu solatium.

*அல்ல லுற்றோர்க் கின்பமே*
*அக்கினியிற் குளிரே*
*எல்லையில்லாத் துயரால் - அழும்*
*ஏழைகட் காறுதலே.*

O lux beatissima, reple cordis intima tuorum fidelium.

*பேரின்பத்தின் சுடரே - மிக்க*
*பிரகாசமே, அடியோர்*
*கோரும் வரங்களையே - என்றும்*
*கொடுத் தெமை யாண்டருளும்.*

Sine tuo numine, nihil est in homine, nihil est innoxium.

*மண்ணி லுண்டாவ தெல்லாம் - உன்*
*மகிமையி னாலல்லவோ*
*எண்ணும் அடியவரால் - நன்மை*
*ஏதும் வருவ துண்டோ.*

Lava quod est sordidum, riga quod est aridum, sana quod est saucium.

*தூய மனத் தழுக்கை - நன்கு*
*துடைத்துக் கழுவிடுவீர்*
*காய்வ தீர மாக்குவீர் - நோவைக்*
*கடிந்து குண மாக்குவீர்.*

Flecte quod est regidum, fove quod est frigidum, rege quod est devium.

*ஆங்காரத்தைத் தாழ்த்துவீர் - தெய்வ*
*அன்பாந் தழல் மூட்டுவீர்*
*தீங்கினையே அகற்றி - நேரே*
*திருத்தி நடத்திடுவீர்.*

Da tuis fidelibus, in te confidentibus, sacrum septenarium.

*நம்பின பேர்களுக்கு - உம்*
*நற் கொடை யேழையுமே*
*இன்பமாய்த் தந்தருளி எமை*
*இம்மையிற் காத்திடுவீர்.*
*பாவத்தையே விலக்கி - புண்ணிய*
*பாக்கியம் தந்தருள்வீர்.*

Da virtutis meritum, da salutis exitum, da perenne gaudium. Amen.
Alleluja.

*ஓவிய நன் மரணந் - தந்தெமை*
*உயர் கதி சேர்த்திடுவீர். ஆமென்.*
*அல்லேலூயா.*

**தொடர்ச்சி 20-ம் பக்கம் காண்க ...**

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை


(இக்கட்டுரைத் தொடர் Rev. George A. Kelly எழுதிய "The Catholic Family Hand Book" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

## 1. மகிழ்ச்சியான குடும்பம் (தொடர்ச்சி)

### பெற்றோர்களின் பொறுப்பு!

*இரு வகையான ஜீவிய வழிமுறை மட்டுமே உங்களுடைய பிள்ளைகளுக்கு காண்பிக்கப்படுகின்றன. ஒன்று, அவர்கள் சர்வேசுரனை மையமாகக்கொண்டு ஜீவிப்பார்கள். அல்லது சுயநலவாதியாக மாறுவார்கள். ஒவ்வொரு சிறுபிள்ளையும் அவ்வப்போது தோன்றும் தனது சுயநல விருப்பங்களைத் திருப்திப்படுத்தவே தேடுகிறது. அவ்வாறு தங்களுடைய சுயவிருப்பங்களைத் திருப்திபடுத்துவதற்கு முன்பாக, உங்களின் பிள்ளைகளின் இருதயங்களில் சர்வேசுரனைப்பற்றிய சிந்தனையை ஏற்படுத்தவேண்டும். அப்படி சர்வேசுரனைப்பற்றிய எண்ணத்தை ஏற்படுத்தும் ஞானப் பயிற்சியை அளிப்பது என்பது நீங்கள் ஈடுபடும் காரியங்களிலேயே மிகப் பெரிய சவாலான காரியமாக விளங்கும். அதற்கு நமது நேச ஆண்டவருடைய ஜீவியத்தை நீங்கள் உங்களுடைய இல்லங்களில் கொண்டுவரவேண்டும். கீழ்ப்படிதலும், பொறுமையும் மிகுந்த நமது திவ்விய இரட்சகரைக் கண்டுபாவிக்கும்படியாக, உங்கள பிள்ளைகளின் சுயநலமான விருப்பங்களை மறுக்கும்படி, அவர்களுக்கு நீங்கள் கற்றுக்கொடுங்கள். அப்பொழுது, அவர்கள் சுபாவத்துக்கு மேலான விருப்பத்தோடு அந்த ஒறுத்தல்களை புண்ணிய செயல்களாகச் செய்வது மட்டுமல்லாது, சர்வேசுரனே அப்பிள்ளைகளின் எல்லா பற்றுதல்களின் மையமாகத் திகழ்வார். அப்பொழுதுதான், உங்கள் பிள்ளைகள் தங்களுடைய ஞான ஜீவியத்திற்கான அந்தஸ்தை முழுமையாக அடைந்துகொள்வர்.*

*உங்களுடைய பிள்ளைகளிடமே நீங்கள் மகிழ்ச்சியைக் கண்டடையவேண்டும். நீங்கள்தான் உங்களுடைய பிள்ளைகளின் முதல் முக்கிய ஆசிரியர் என்பதையும், உங்களால்தான் அவர்களிடம் மிக முக்கியமான மாற்றம் - பாதிப்பு ஏற்படுகிறது என்பதையும் நீங்கள் ஒருபோதும் மறக்கக்கூடாது. அதே நேரத்தில் உங்களுடைய பிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்காக நீங்கள் அடைந்த துன்ப வருத்தங்களையும்பற்றி உங்களுடைய பிள்ளைகளிடம் அதிகப்படியான அளவிற்கு வெளிப்படுத்துவீர்களேயானால், அது உங்களுடைய குடும்ப ஜீவித்தை, அதன் உண்மையான ஆரோக்கியமான வசீகரத் தோற்றத்தை இழக்க நேரிடும். ஏனென்றால், உங்களுடைய பிள்ளைகளிடம் நீங்கள் கொள்ளும் ஆனந்தம், அவர்களுக்காக நீங்கள் அனுபவிக்கும் மற்றெந்த இடர்பாடுகளைவிட பலமடங்கு அதிகமாக உங்களுடைய இருதயத்தில் இடம் பிடிக்கவேண்டும். அவர்களிடமே உங்களுடைய சொந்த மகிழ்வைக் கண்டடையவேண்டும். தம்பதிகளாகிய உங்களது அன்பிற்கு உருவம் கொடுப்பது உங்களின் பிள்ளைகளே. ஒருவேளை, அதுவரையிலும் தங்களின் திருமண அன்பு சுயபட்சமுடையதாகவும், தனிப்பட்டதாகவும் இருந்தால், குழந்தை பிறந்ததும் அது மாபெரும் வகையில் வளர்ச்சி பெற்று முழுமையடைகிறது.*



*"அடுத்தடுத்து குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும் வரையிலும் நானும், எனது கணவரும், எங்களிடையே உள்ள சிநேகம் எவ்வளவு வளர்ச்சி அடையும் என்பதை அறியாதிருந்தோம்" என்று பல இளம் தாய்மார்கள் சொல்லியிருக்கிறார்கள். மனித வளர்ச்சியின் முழுமையை அடைவதற்கு குழந்தை வளர்ப்பு மிகப்பெரிய உதவியாக இருக்கிறது. "நல்லொழுக்கமுள்ள இளைஞர்களை உருவாக்குவதைவிட அதிக பொறுப்புள்ள அலுவல் வேறு எதுவும் உண்டோ? அவ்வாறு இளைஞர்களின் ஆன்மாக்களை உத்தமமாக உருவாக்குபவர் ஓவியர் மற்றும் சிற்பியைவிட சிறந்தவர் என்று கருதுகிறேன்" என்று அர்ச். கிறிசோஸ்தம் அருளப்பர் கூறுகின்றார். உங்களுடைய குழந்தைகளில் நீங்கள் உங்களுடைய இளமைப்பருவத்தையே மறுபடியும் கண்டுபிடிப்பீர்கள். அவர்களிடம் ஏற்படும் வளர்ச்சி, உங்கள் இருதயங்களில் ஆச்சரியத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்துவதை உணர்வீர்கள்.*

*"வானம் ஏன் நீல நிறமாக இருக்கிறது?" என்று உங்களுடைய குழந்தை உங்களிடம் கேட்கும் போது, அதுவரை அத்தகைய சிந்தனையே இல்லாத நீங்கள், அப்போதுதான் புதிதாக பார்ப்பது போல வானத்தை அதிக நேரம் உற்றுப் பார்ப்பீர்கள். நீங்கள் இவ்வுலகில் ஜீவித்தீர்கள் என்பதற்கு அத்தாட்சியாக உங்களுடைய குழந்தைகளைத் தவிர வேறு எதைக் காண்பீர்கள்? ஒரு மனிதனுக்கு 40 அல்லது 50 வயது ஆகும்போது, அவன் தன் வருமானத்தினுடையவும்,*

சமூக அந்தஸ்தினுடையவும் இறுதி வரம்மை அடைகிறான். ஆனால் இவ்வயது வரம்பை எட்டும் பெற்றோர்கள், இத்தகைய வரையறை எதுவுமில்லாமல், தங்களுடைய பிள்ளைகளின் சாதனைகளுடன் "எல்லாவற்றையும் நிறைவேற்றிவிட்டோம்" என்ற உணர்வும் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. அதைவிட மேலான மிக முக்கியமான ஞான அலுவலையும் பெற்றோர்கள் மேற்கொள்கின்றனர். அது என்னவெனில், தங்களுடைய குழந்தையின் மூலம் தங்களுடைய குடும்பங்களில் வேத விசுவாசத்தைப் பரப்பும் உண்மையான வேத போதகர்களாகத் திகழ்கின்றார்கள். "நீர் எனக்குக் கொடுத்தவைகளைக் காத்துவந்தேன்" (அரு. 17:12) என்று நமதாண்டவர் தமது அப்போஸ்தலர்களைப்பற்றிக் கூறியது போல பெற்றோர்களும் தங்களுடைய ஜீவியத்தின் இறுதியில் கூறமுடியும்

(தொடரும்)

**18-ம் பக்கம் தொடர்ச்சி . . .**

- கிறீஸ்துவின் திரு சரீரம், இரத்தத்தின் திருநாள் Corpus Christi அதாவது திவ்விய நற்கருணை திருநாள் பூசையில் பாடப்படும் "Lauda sion... சீயோனே புகழ்வாய்..." என்ற தொடர் கீதம் அர்ச். தாமஸ் அக்வினாஸ் என்ற வேதசாஸ்திரியால் (+1274) எழுதப்பட்டது.

- மரித்தோர்களுக்கான தினசரி பூசையில் பாடப்படும் "Dies Irae... தேவ கோபம் வரும் நாள்..." என்ற தொடர் கீதம் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த சோதோனோ தாமஸ் (+1255) என்பவரால் இயற்றப்பட்டது.

- இரண்டு வியாகுல மாதா திருநாட்களில் பாடப்படும் "**Stabat mater... மாறா வியாகுல மிக்க தாய்...**" என்ற தொடர் கீதமானது 1306-ல் என்பவரால் எழுதப்பட்டாலும் 1727 வரையிலும் ரோமை பூசைப் புத்தகத்தில் சேர்க்கப்படவில்லை!

திவ்விய பலிபூசைகளில் பாடப்படும் இந்த ஐந்து தொடர் கீதங்களும் திருச்சபையின் கீதவியலின் (Hymnology) உருவாக்கமாக மிகுந்த உயர்ந்த நிலையில் மகிமையோடு இசைக்கப்படுகின்றன. இவை "மோட்ச இரகசியங்களின் மறை பொருளானவைகளை பூமியிலே தொடர்ந்து பாடும் நறுமணம் கமழும் கிறீஸ்தவப் பாடல்களாகத் திகழ்ந்து, நித்திய மோட்ச தொடர் கீதத்தில் பங்குகொள்ள நம்மைத் தயாரிப்பதாகவும் அமைந்துள்ளன" என்று Gueranger என்ற திருவழிபாட்டு அறிஞர் கூறுகிறார். இவை ஒவ்வொன்றும் அதனதன் தனித்தன்மை வாய்ந்த அழகை வெளிப்படுத்துபவையாகவும் திகழ்கின்றன.

(தொடரும்)

## தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்கள்:

**பாளையங்கோட்டை:**
அர்ச். தமத்திரித்துவ ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**சிங்கம்பாறை:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201..

**கிறீஸ்துராஜபுரம்:**
கிறீஸ்துராஜா ஆலயம்,
தொலைபேசி எண்: 04651 - 294785

**நாகர்கோவில்:**
அர்ச். தோமையார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**தூத்துக்குடி:**
அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம்:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2586201.

**திருச்சி :**
அர்ச். சூசையப்பர் சிற்றாலயம்
No-14/2, 3-வது மெயின் ரோடு
ஸ்ரீனிவாசா நகர், திருச்சி - 620 017.
தொலைபேசி எண்: 0431 - 2782798.

**சென்னை:**
அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்.
தொலைபேசி எண்: 044-22355389; 9791134344; 9445122353; 9444685103.
**ஞாயிறு பூசை நேரம் : மாலை 6.00 மணி**

**ஆர். என். கண்டிகை:**
ஜென்ம இராக்கினி ஆலயம்.
தொலைபேசி எண்: 9444122316.

Society of St. Pius X
#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com (or) rajakumar@sspx.net